தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

" போற்றுபவர் போற்றட்டும்!
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

ஆண்டு சந்தா ரூ. 6

ஆறுமாதச் சந்தா ரூ. 3

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 18—6—55 | சனிக்கிழமை | இதழ் 1

" எப்படி வாழ்வேன் இனிமேல் இப்புவிமீது
ஏழையும்நான் அந்தோ ?"

என்னும் இசை எங்கிருந்தோ வந்து இதயத்தைத் தொடுகிறது. ஏழையொருவன் நான் எப்படி வாழ்வேன் என்று கேட்கிறான். ஏழையாயிருக்கிறேனே, நான் எப்படி வாழ்வேன் என்று புலம்புகிறான். எனவே, ஒருவன் வாழவேண்டுமென்றால் அவன் ஏழையாயிருக்கக் கூடாது என்னும் உண்மை உலகோர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட உண்மையாக இருக்கிறது.

ஏழ்மை என்றால் என்ன? சுருக்கமாகச் சொல்லிவிடுவோம், ஏழ்மை என்றால் இல்லாமை என்று. எது இல்லாமை? பொருள் இல்லாமை. பொருள் என்றால்......? பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் நெல்லும், கோதுமையும், கம்பும், சோளமும், இராகியும், ஒட்டகமும், ஆடும், மாடும், குதிரையும், நாயும், நிலமும், நீரும், காடும், மலையும், இரும்பும், செம்பும், வெள்ளியும், தங்கமும், மணியும், முத்தும், பொருளாக விளங்கின. இந்தப் பொருள்களுக்கும் வாழ்வுக்கும் உள்ள தொடர்புகள் என்ன? நெல்லும் கோதுமையும் இன்ன பிற தானியங்களும் மனிதனுக்கு உணவாகின்றன. ஆடும் மாடும் குதிரையும் நாயும் மனிதனுக்காக உழவும், உழைக்கவும், காவல்புரியவும், பால் தரவும், இறைச்சியாக உண்ணவும் என்று இப்படி பலவகையான பயன்களை மனிதனுக்கு ஈந்துதவுகின்றன. இரும்பும், செம்பும் இன்னபிற உலோகங்கள் கத்தி, கடப்பாறை, சுத்தி, சம்மட்டி, உண்கலம், கொள்கலன் எனப் பலவகையான ஆயுதங்கள் செய்யவும் சாதனங்களாக்கிக் கொள்ளவும் உதவுகின்றன. வெள்ளியும், தங்கமும், மணியும், முத்தும் மனிதனுக்கு அழகு செய்தும், பல மனிதர்களிடத்தில் இல்லாத; எளிதில் கிடைக்கமுடியாத அரியபொருள்கள் என்னும் நிலையிலிருந்தும் திருப்தி செய்கின்றன. நிலமும், நீரும் ஆணும் பெண்ணும் தங்கள் குழந்தைகளோடு பாதுகாப்பாக இருந்து மகிழ்ந்து உயிர்வாழப் பயன்படுகின்றன. காடுகளும், மலைகளும் மனிதன் வேட்டையாடி மகிழவும், மலைபடு பொருள்களைக் கொண்டு பயனுறவும் உதவுகின்றன.

எனவே, பொருள்கள் எனப்படுபவை மனிதனுடைய பல்வகையான இன்றியமையாத உடல், உள்ளத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அவசியம் தேவைப்படுகின்றன. மனிதனது இயல்பான உணர்வுகளிலும் அவைகள் ஏற்படுத்தும் இன்றியமையாதத் தேவைகளிலும் முக்கியமானவற்றைக் கூடுமானவரை பின்கண்டவாறு வகுக்கலாம்.

உணர்வுகள்	தேவைகள்
1. பசி, தாகம், களைப்பு, உறக்கம், உடற்சுகம் நாடுதல்.	உணவு, நீர், ஓய்வு பெறவும் உறங்கவும் நல்ல ஒதுக்கிடங்கள் (உறைவிடங்கள்). உடை வகைகள்.
2. காதல், மனிதகுலம் மாளாமலிருக்கச் சந்ததிகளைப் பெருக்குதல், மனைவி மக்களைக் காப்பாற்றுதல் (பசி, தாகம், களைப்பு, பகை, நோய் ஆகியவைகளிலிருந்து.)	காதல் வாழ்வுக்கும், அதில் கலவியும் குடும்ப வாழ்க்கைக்கும் ஏற்ற சூழ்நிலைகளும், தக்க பாதுகாப்புகளும்.
3. வாட்டும் தனிமை.	தன்னினத்தைச் சேர்ந்தோரின் நல்ல கூட்டுறவு, இனிய நட்புறவு.
4. தன்னைச் சுற்றிலும் உள்ள அனைத்தையும் பற்றித் தெரிந்து கொள்ளவும், புரிந்துகொள்ளவும் வேண்டுமென்ற தணியாத ஆர்வம்.	கல்வி கற்பதற்கான சீரியவாய்ப்புகள். புதிய கண்டு பிடிப்புகளுக்குத் துணைபுரியும் விஞ்ஞான அறிவும் சாதனங்களும்.
5. மனிதருள் சிறந்தமனிதனாய், மற்றவர்கள் கண்டு பணியவும், விரும்பவும், மதிக்கவும் தக்க மனிதனாய் விளங்கவேண்டுமென்பது.	அழகுச் சாதனங்கள், பலரிடம் இல்லாத ஆனால், அனைவரும் பெற விரும்பும் பல அரிய பொருள்களை உடைமையாக்கி மகிழ்தல், பெருகிய ஆற்றலைப் பலவகையாலும் விளக்கி மகிழவாய்ப்புகள்.

எனவே, மேற்கண்ட தேவைகள் நிறைவேறுவதில்தான் வாழ்வு அமைந்துள்ளது. மேற்கண்ட தேவைகளனைத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடிந்தால்—அதுவும் அதிக சிரமப்படாமலும், காத்திருக்காமலும் நிறைவேற்றிக்கொள்ள முடிந்தால், வாழ்வு இன்பவாழ்வு ஆகிவிடுகிறது. மாறாக, தேவைகளனைத்தையும் நிறைவேற்றிக்கொள்வதில் அதிகச் சிரமமும், காலதாமதமும் ஏற்படும்போது வாழ்வு துன்ப வாழ்வு ஆகிவிடுகிறது. தேவைகளிலொன்றிலும் ஒன்றைக்கூட நிறைவேற்றிக்கொள்ளமுடியாதபோது வாழ்வே முடிந்துவிடுகிறது. எனவே வாழ்வு என்பது மேற்கண்ட தேவைகள் நிறைவேறுவதைப் பொறுத்தது என்றால், வாழ்வில் இன்பமும், துன்பமும் தேவைகளை நிறைவேற்றிகொள்ளச் செலவழிக்கும் காலம், உழைப்பு ஆகியவைகளைப் பொறுத்தே விளைகின்றன.

இந்த விதியின்படிதான் ஒரு நாடு இன்பமாய் வாழ்கிறதா அல்லது துன்பத்தில் உழல்கிறதா, என்பதைக் கண்டுகொள்கிறோம். ஒரு நாட்டில் உள்ள மக்களுக்குக் கிடைக்கும் பொருள்களின் அளவையும், தன்மையையும், எவ்வளவு எளிதில் கிடைக்கின்றன என்பதையும் பொறுத்துத்தான் அந்நாட்டு மக்களின் வாழ்வு அமைகிறது. ஏனெனில், மனிதனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளப் பல பொருள்கள் தேவைப்படுகின்றன. நல்ல விளைச்சல் இல்லாமல் உணவுப் பொருளுக்குப் பஞ்சம் ஏற்பட்டால் மனிதன் பசியால் வாடிச் சாகிறான். உடற்சுகத்துக்கும், ஓய்வுபெறவும், மனைவி, மக்களோடு வாழவும் வீடுகள் கட்டிக்கொள்ளப் போதுமான இடமும், கல், மரம், இரும்பு, சுண்ணாம்பு, மண் ஆகியவைகளும் கிடைக்காவிட்டால், பாதுகாப்பற்ற பரிதாப வாழ்விற்கு இலக்காகிக் காப்பாற்றப்பட வேண்டிய மனைவி மக்களைக் காப்பாற்ற முடியாமல் இழந்து பரதவிக்கிறான். எனவே, மனிதன் இன்புற பொருள்கள் நிறைய எப்பொழுதும் தேவைப்படுகின்றன. ஆகவே, மனிதனது எண்ணங்கள் நோக்கங்கள் அனைத்தும் வாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழிவகைகளைத் தேடுவதும், அவைகளை எளிமையாக்க முயலுவதுமேயன்றி வேறல்ல,

மனிதன் தோன்றிய நாளிலிருந்து சிந்தனையாளர்கள் சிந்தித்தவையெல்லாம் இவை பற்றித்தான். உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் வகை வகையான மக்களில் ஒவ்வொரு வகையினரும் தங்கள் தங்கள் நீண்டகால அனுபவத்திற்கும், தங்களிடையே அவ்வப்போது தோன்றும் சிந்தனையாளர்களின் அறிவுரைக்கும் ஏற்பத் தங்கள் தங்கள் பழக்க வழக்கங்களை, அவைகளை நெறிப்படுத்த நடத்திச் செல்வதற்கான பலம் பொருந்திய அரசை அரசின் வகையை மாற்றி அமைத்துக்கொண்டு இன்பம் எய்த முயன்று வருகின்றனர்.

விஞ்ஞானத்தின் துணையால் இன்றைய மனிதன் உலகம் முழுவதையும், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் வகை வகையான மக்களையும்

வளமாக வாழ வழியிருந்தும் வறுமை ஏன்? பொருளாதார சக்கரம் பலவீனப்பட்டதேன்? புள்ளி விபரத்தோடு விளக்குகிறார்.......

ஈ.வே.கி.சம்பத்

(நாடுகளையும்), அவர்தம் வாழும் முறைகளையும், வரலாறுகளையும் கண்டு உணரமுடிகிறது. இதன் விளைவாய் கிடைத்தற்கரிய பல உண்மைகள் புலப்படுகின்றன. இந்த உண்மைகள் துன்பவாழ்வை இன்பவாழ்வாய் மாற்றிக்கொள்ளத் துணைபுரிவதோடுகூட, வாழ்வு துன்பமாய் உள்ளதற்கான காரணங்களைத் தெள்ளத்தெளியக் காட்டுகின்றன.

விடுதலைபெற்ற மக்கள், சுதந்திர அரசை அமைத்துக்கொண்டு சுக வாழ்வு பெற்றுள்ளதைக் காணும்போது, அடிமைத்தளையில் சிக்குண்டு அவதிப்படும் மக்கள், விடுதலை வாழ்வே இன்பந்தரும் வாழ்வு என்பதைக் கண்டுகொள்கின்றனர். இந்த உண்மை புலப்பட்டதும் விடுதலை பெறத் துடிக்கின்றனர். போராடுகின்றனர். வெற்றியும் பயனும் பெறுகின்றனர். விடுதலை பெற்ற நாடுகளிடையேகூட வளம் தேடிக்கொண்ட நாட்டுமக்கள் வாழ்விலிருந்து வளம்தேடிக் கொள்ளாத நாட்டுமக்களின் வாழ்வு வேறுபட்டு துயருறுகிறது. இச்சமயத்தில் இன்புறும் நாட்டின் முறைகளைப் பின்பற்றி தமது முறைகளையும் அமைத்துக்கொண்டு இன்பம் எய்துகின்றன. வாழ்வின் இன்பமும், இன்பம் அடைவதற்கான சீரிய வாழ்க்கை முறைகளையும் படைத்துள்ள நாடுகள் மற்றநாடுகளைவிட வலிவிலும் சிறந்த நாடுகளாக விளங்குகின்றன. வாழும் மக்களில் கால் பகுதியினர் முழுபட்டினி, அரைப்பகுதியினர் அரைப்பட்டினி என்னும் நிலையில் உள்ள நாடோ, உள்ள மக்களில் கல்வி அறிவுபெற்றவர்கள் அரைக்கால், பெறாதவர்கள் முக்காலே அரைக்கால் என்னும் நிலையில் உள்ள நாடோ, ஒழுங்கான, நாகரீகமான காதல் வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும் வாய்ப்பற்றவர்கள் வெகுபேர் வாழும் ஒரு நாடோ வலிவுள்ள ஒரு நாடாகத் திகழச் சாத்தியமில்லை!

இன்றைய உலகில் வலிவுள்ள நாடுகள் எனப்படும் இரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இதர ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் வாழும் மக்கள் உலகில் மற்ற நாடுகளில் வாழும் மக்களைக் காட்டிலும் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதில் வெற்றிபெற்று வருகிறார்கள். அதாவது மற்ற மக்கள் பெற்றுள்ளதைக் காட்டிலும் இன்பவாழ்வு பெற்றுள்ளார்கள். அவர்கள் அபரிமிதமான உணவையும், உடையையும் உற்பத்தி செய்துகொள்ளுகிறார்கள். அவர்களது காதல் வாழ்வு ஒருவன் ஒருத்தியை அடிமையாக்கி 'இன்பம்

([illegible] பக்கம் பார்க்க)

எண்ணம்

கண்ணதாசன்

தென்றலின் இரண்டாவது வயது இந்த இதழில் தொடங்குகிறது. ஆடம்பரமில்லாமல் ஆர்ப்பாட்டமில்லாமல் அதிக விலைபோடாமல் இந்த இரண்டாவது வயதுத் துவக்கத்தை இரண்டணுத் தென்றலாகவே தந்துள்ளோம்.

ஒரு ஏடு, தன் முதலாண்டை முடித்துக்கொண்டு இரண்டாவது படிக்கட்டுக்கு வருகிறதென்ருல், அது சர்வ சாதாரணமாக 'மைனர் நடை' போட்டு வந்துவிட்டது என்று யாரும் எண்ணிவிடக்கூடாது. எந்தப் பத்திரிகையையும், படிக்கிற வாசகருக்கு ஐம்பத்திரண்டு இதழ்கள் வந்த கணக்குத் தெரியுமே தவிர, அது வந்த வழியும், வழியில் வந்த இடரும், இடர்கொண்டிருந்த உருவங்களும் தெரிய நியாயமில்லை. ஆனல், ஒவ்வொரு இதழையும் - எழுதி - அச்சடித்து அனுப்புகிற பொறுப்பாளன் இருக்கிருனே அவன், முன்னூற்று அறுபத்தைந்து நாட்களிலும்அவற்றை, விழித்திருந்து கடக்கிறன். இதழ் ஒருநாள் தாமதமாகிவிட்டால் துடிக்கிருன். அச்சுப்பிழையைக் கண்டுபிடித்து அவதிப்படுகிறன்: இருபத்திநான்கு மணி நேரமும் தானிருந்து கவனிக்க வாய்ப்பில்லாமல் பொறுப்பைப் பிறர் கையில் ஒப்படைத்து, வந்துபோகிறவனுக அவன் இருந்துவிட்டால், அவன் ஒவ்வொரு தடவை அலுவலகத்துக்குள் நுழையும்போதும் ஏதாவதொரு சோகச் சேதியை எதிர்பார்க்கிருன். குறைந்தபட்சம் அச்சுப்பிழையாவது தாமதமாவது அவனை எதிர்கொண்டழைக்கிறது. அதிலும், பத்திரிகையை அழகான அமைப்பிலும் அருமையான எழுத்துக்களிலும், கட்டுரைகளிலும் கொண்டுவர ஆசைப்பட்டு, சிரமப்படுபவன், சங்கடப்படுகிருன். இப்படி, பல சோக நாடகங்களிலும் முழுப்பங்கெடுத்துக்கொண்டு, பத்திரிகையை அச்சடித்து அனுப்பிக்கொண்டிருக்கிருன். ஆனல், வாசகர்களோ என்ருல், ஒவ்வொரு இதழையும் பற்றிய தங்கள் கருத்தை-சுலபமாக எழுதிவிடுகிருர்கள். தென்றலைப் பொறுத்த அளவில், பாராட்டுக்களே அதிகம்என்ருலும், சில இதழ்களின் காலதாமதம் நண்பர்களுக்குக் கோபத்தைத் தந்திருக்கிறது.

இனி எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு கால ஒழுங்கைக் கவனிப்போம் என உறுதி கூறுகிறேம்.

முதலாண்டு, தென்றலுக்கு, வேறு எந்த இதழும் காணு பெரும் புகழைத் தந்திருக்கிறது. கல்லூரிகள், தமிழவைகள், புலவர் கரங்கள், தோழர்களின் இல்லங்கள், பகைவர்களின் உள்சட்டைப்பைகள், நடிகர்களின் இல்லங்கள் - எங்கும் தென்றல் சிலுசிலுவென வீசி வந்திருக்கிறது. கடல்கடந்து சென்றிருக்கும் தோழர்கள், பிரிந்திருக்கும் காதலிக்கு எழுதுவதுபோல் தென்றலுக்குக் கடிதம் எழுதுகிறர்கள். தென்றல் நடத்தும் வெண்பாப் போட்டியில் புலவர்கள்பலரும் கலந்துகொண்டு வருவது தென்றலுக்கு அவர்கள் தரும் மதிப்புக்கு அடையாளமாகும். இப்படி அங்கிங்கெனுதபடி எங்கும் தவழ்ந்து பலரையும் அரவணைத்து வருகிறது. தென்றல் கொள்கைக்குப் புறம்பாகாத இலக்கிய சர்ச்சைகளில் பங்கெடுத்துக்கொண்டு, சென்ற ஆண்டில் சில குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. தமிழாசிரியர் பலரை, நம்மை கவனிக்கச் செய்திருக்கிறது. அரசியல் அதிர்வேட்டுக்களைக் கலங்க வைத்திருக்கிறது. மாணவர் சிலரை எழுத்தாளராக்கி ஊக்குவித்திருக்கிறது. பல நண்பர்களும் எழுதியபடி எளிய-புதிய-நடையைத் தோற்றுவித்திருக்கிறது. இலக்கியக் கேள்விகளுக்கு பதில் சொல்லும் முறையைத் துவக்கியிருக்கிறது. அதோடு,-சரியோ தவறோ - வலிய வம்பிழுத்துமிருக்கிறது: வந்த வம்பை வளர்த்தும் இருக்கிறது ! இப்படி உணர்ச்சிமிக்கநடைபோட்டு, அறிவுப்பணி புரிந்திருக்கிறது, தென்றல், சென்ற ஆண்டு !

ஆனல். இவ்வளவும் செய்வதற்கு அது, உரிமையாளனிடம் பெற்றுக்கொண்ட விலை இருக்கிறதே, அது அதிகம். ஆம்; தென்றலின் சென்ற ஆண்டுக் கணக்கு சில ஆயிரம் ருபாய்கள் நட்டத்தில் முடிந்திருக்கிறது. "எப்படி வரும் இவ்வளவு பிரதிகள் போகும்போது ?" என்று நண்பர்கள் திகைப்பர். காரணம் இதுதான்; 'கிரவுன்' அளவில் பன்னிரண்டு பக்கங்கள் போட்டு, வர்ணச்சாலம் புரிந்து, 'பிளாக்' குகளால் நிறைத்து, இரண்டணுவுக்குத் தருவதென்ருல் சுமார் முப்பதாயிரம் பிரதிகள் செலவழிந்தால்தான் லாபநட்டமில்லாமற் போகும்: அச்சகம் கையில் இருந்தாலும் - முப்பதாயிரம் பிரதிகளுக்குக் குறைந்தால்-நட்டந்தான் வரும். நிறையத்தரும் ஆசை, நட்டத்தைப் பொருட்டாக மதிக்காமல் கொண்டு செலுத்திக்கொண்டிருக்கிறது.

இதிலே லாபம் கிடைப்பதாக யாராவது கருதிக்கொண்டிருந்தால், தயவுசெய்து அவர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். விளம்பர உதவி அதிகமில்லாமல் நிறையப் பக்கம் வெளியிடும் எந்தப் பத்திரிகையும் நட்டத்திற்குத் தப்பமுடியாது என்பதை நண்பர்கள் நினைவில் கொள்ளவேண்டும். இவ்வளவு நன்ருகச் செய்வதனுல், "லாபம் வந்துக்கொண்டு தானிருக்கிறது" என்று வாசகர்கள் நினைப்பது இயற்கை. அதற்கே இதனைக் குறிப்பிட்டோம். வாங்குவோர் எண்ணிக்கை இன்னும் பெருக நண்பர்கள் குறைந்தபட்சம் 'வாயுதவி' யாவது செய்யக் கோருகிறேம். சந்தாதாரர்களை அதிகம் சேர்த்துத் தருவது, தென்றலை உண்மையிலேயே நேசிப்பவர்களின் கடனுகும்.

பத்திரிகைத் தொழிலே உண்மையில், பயங்கரமான தொழில்தான். அதிலும் கொள்கைக்கென வரும் இதழ்கள், லாபத்தொழில் நடத்தலே முடியாது. சமீபத்தில் ஒரு அமெரிக்கப் - பழைய - பத்திரிகை ஒன்றைப் பார்த்தோம். அதில் ஒரு துணுக்கு இருந்தது. அதை முன்பே தென்றலில் பிரசுரித்துள்ளோம் என்ருலும் இப்போது நினைவுபடுத்திப் பார்ப்பது, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாகும். ஒரு பத்திரிக்கை உரிமையாளரை ஒரு ரசிகர் சந்தித்தாராம் அந்த ரசிகர், அவரைப் பார்த்து, "ஏனையா ! பதினெட்டு வருடமாகப் பத்திரிகை நடத்துகிறீரே, பாங்கியில் உமது பெயரால் எவ்வளவு இருக்கிறது ?" என்று கேட்டாராம். அதற்கு அந்த உரிமையாளர், முகம் மலர்ந்து, "எழுபதினுயிரம் டாலர்கள்" என்ருராம். ரசிகர் புளகாங்கிதம் எய்திப் பூரித்துத் திரும்பினுராம் பின்னுலிருந்த பத்திரிகை உரிமையாளா, அவரைக் கைதட்டி அழைத்து, மெதுவாக அவர் காதில் பின்வருமாறு சொன்னுராம். "எனது தந்தையார் வைத்த பூர்வீகச் சொத்து - அதில் அறுபத்தொன்பதாயிரத்து தொளாயிரத்துத் தொண்ணுற்றென்பது !"

இது சில முதலாளித்துவப் பத்திரிகைகளைத் தவிர பாக்கி அத்தனைக்குமே பொதுவான கதை தான். ஆனல், தென்றல், தனது பயணத்தை ஒழுங்காகத் தொடரும் என்ற உறுதியளிக்க எமக்குத் தைரியம் இருக்கிறது. நண்பர்கள் செய்யவேண்டியது - சந்தா !-ஆம் ! சந்தா ! ஆண்டுக்கு ஆறு ரூபாய் ! அது போதும்; இனும் வேண்டாம் !

சென்ற ஆண்டில் தென்றலுக்கு, கதை, கட்டுரை, கவிதை எழுதி வழங்கிய நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

தென்றலின் வளர்ச்சியில் உதவி ஆசிரியர்களாகவும் நிர்வாகிகளாகவும் பணியாற்றிய, தோழர்கள் அனைவரும் இந்தச் சமயத்தில் நினைவுகொள்ளத் தக்கவர்கள்.

பத்திகை அமைப்பு முறைக்கு ஆலோசனை கூறிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

இரண்டாவது ஆண்டு, புதிய தொடர் நாடகத்தோடு துவங்குகிறது. தோழர் சம்பத்தின் தொடர் கட்டுரை அழகுறத் துவங்கி இருக்கிறது. நண்பர் கதிரனின் கருத்துக் கருவூலம் வந்துள்ளது. பன்மொழிப் புலவரின் 'சிலம்பு வழங்கும் செல்வம், அவரது உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளது. அதுவும் மிக விரைவில் வரும். இவ்வளவு தொடர் சித்திரங்கள் இருப்பதால், காரைமுத்துப் புலவரின் 'மனித மனம்' காலம் பார்த்து வெளிவரும் ! சுவை பயக்கும் பல அம்சங்கள் தென்றலில் அடிக்கடி வெளிவரும்.

★

இலக்கியப் பரிசு-முடிவு தேதியை ஒத்திவைக்கக் கோரி சில நண்பர்கள் எழுதியுள்ளனர். இனி அது ஏலாது. 30-6-55 க்குள் தங்கள் எழுத்துக்களைஅனுப்புவைக்குமாறு நண்பர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

பொதுச்செயலாளர் வாழ்த்துகிருர் !

"தென்றல்" தனது ஓராண்டு காலப் பயணத்தை இனிது முடித்துவிட்டு இரண்டாவது ஆண்டு பயணத்தை 18-6-55-ம் நாளிலிருந்து துவக்குகிறது என்ற நற்செய்தி மட்டற்ற மகிழ்ச்சியூட்டுவதாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து மணத்தைத் தமிழர்கள் உள்ளந்தோறும் கொண்டுபோய்ச் சேர்க்கும் சிறந்த பற்றுக்கோடாகத் "தென்றல்" தமிழகம் எங்கணும் வீசுவதாக ! "தென்றல்" வாழ்க ! வளர்க !

இரா. நெடுஞ்செழியன், 13-6-55.

அடுத்த இதழில்.....?

பண்டை எழுத்துக்கள்

எகிப்து, சீனம், பாபிலோனியா முதலிய நாடுகளில் தோன்றிய நாகரிகங்களே உலக நாகரிகங்களில் மிகப் பழமையானவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இவ்விடங்களில் கிடைத்துள்ள எழுத்துக்களின் வளர்ச்சிக் குறிகளையும், மெக்ஸிகோ, ஈஸ்டர் தீவுகள் முதலியவற்றில் காணப்படும் எழுத்துக் குறிகளையும் நன்கு ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், "இவ்வெழுத்துமுறைகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஒருபடித்தாகவே காணப்படுகின்றன" என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

"முதலில உடம்பின் உருவம் அவ்வுயிரைக் குறிக்க வரையப் பட்டது. பின்னர் அவ்வுருவம் அவ்வுயிரைக் குறிக்காமல் நிலத்தைக் குறிக்கப் பயன்பட்டது. முதலில் வரையப்பட்டது 'உரு எழுத்து' எனப்படும்; பின் குறிக்கப்பட்டது சித்திர சங்கேதக்குறி (குழூஉக்குறி) எனப்படும். சீனம், எகிப்து முதலிய பண்டைநாடுகளில் இச்சங்கேதக் குறிகள் பல கிடைத்துள்ளன. நடைக்குக் கால்களும், பார்வைக்குக் கண்ணும், அதிகாரத்திற்குக் கையும, பலத்திற்குத் தோளும வரையப் பட்டன. இங்ஙனம் ஒரு பொருளைக் குறிக்க வரையப்பட்ட சித்திரம், நாளடைவில், அப்பொருளின் பெயரைக் குறிப்பதாக மாறியது. அதுவே 'ஒலி எழுத்து' என்பது. அஃதாவது, 'வேல்' என்பதை உணர்த்தும் சித்திரம், 'வேல்' என்னும் பெயரையே குறிக்கத் தொடங்கியது. ஒரு மனிதனைச்



சித்தரித்துக் காட்டி அவன் கையில் வேல் இருப்பதாக எழுதியுள்ள 'தொடர்ச் சித்திரம்,' 'வேல்,' 'ஆள்,' என்னும் இரு பெயர்களைக் குறிக்கத் தொடங்கியது.

"ஆனால் இக்குறிகளைக் கொண்டு தொடர்மொழிகளையும், முற்றிய கருத்துக்களையும் எழுத இடர்ப்பாடு ஏற்பட்டது. அதனால் வார்த்தைகளை அசைகளாகவும் சீர்களாகவும் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உருவத்தை எழுதி, அவற்றைச் சேர்த்து வாசிக்கும் முறை ஏற்பட்டது. அம்முறையும் கடினமாகத் தோற்றியதால், பின்வந்த மக்கள், சில குறிப்பிட்ட குறிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு குறியையும் அது உணர்த்தும் சொற்களின் சிறப்பாகக் கொண்டனர். இம்முறையில் தோன்றிப் படிப்படியாக வளரத் தொடங்கியதே 'வரிவடிவம்' என்று எழுத்தாராய்ச்சியாளர் எடுத்தியம்புகின்றனர்.

தமிழ் நூற்சான்றுகள்

மேலே கூறப்பெற்ற சித்திரசங்கேதக்குறிகளும், அவற்றின் வழிவ வளர்ச்சிக்குறிகளும் இந்தியாவில் சிந்துவெளி நாகரிகப் புதைபொருள்கள்மீது பொறிக்கப்பட்டுள்ளன. ஏனுவற்றால் இவை இந்தியாவிற்குப் புதியன அல்ல என்பதை அறியலாம்; ஆயினும் மேலே சொல்லப்பட்ட எழுத்துக்களின் வேறு

கல்வெட்டுக்கள்

ரங்களைத் தமிழைத் தவிர வேறு எந்த இந்திய மொழி நூல்களிலும் காணல் இயலாது. நன்னூலுக்கு உரைவகுத்த மயிலைநாதர் எழுத்துக்களை, 1. உருஎழுத்து, 2. தன்மை எழுத்து, 3. உணர்வு எழுத்து, 4. ஒலி எழுத்து என்று குறித்துள்ளார். யாப்பருங்கல இறுதிச் சூத்திரவுரையில் ஒராசிரியனுக்குத் தெரிந்திருக்கவேண்டிய எழுத்து வகைகளைக் குறிக்கும் இடத்தில் உரையாசிரியர், இவ்வெழுத்துக்களுக்குரிய சூத்திரங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

1. "காணப் பட்ட
   வுருவம் எல்லாம்
   மாணக் காட்டும்
   வகைமை நாடி
   வழுவில் ஓவியன்
   கைவினை போல
   எழுதப் படுவது
   உருவெழுத் தாகும்."
2. "கோணடவோர் குறியாற்
   கொண்ட அதனை
   உண்டேன் றுணர்த்துவது
   ... உணர்வெழுத் தாகும்."
3. "இசைப்படு புள்ளின்
   ... எழாஅல் போலச்
   செவிப்புல னுவது
   ஒலியெழுத் தாகும்."
4. "முதற்கா ரணமும
   துணைக்கா ரணமும்
   துணைக்கா ரணத்தோடு
   தொடரிய உணர்வும்
   அவற்றோடு புணர்ந்த
   அகத்தெழு வளியின்
   மிடற்றுப்பிறந் திசைப்பது
   தன்மை எழுத்து."

இவையன்றி, அச்சூத்திரவுரையில் வேறுபல எழுத்துவகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில், காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தில் இறக்குமதியான மூட்டைகட்குக் 'கண்ணெழுத்து' இடப்பட்டது என்பது கூறப்பட்டுள்ளது. 'கண்ணெழுத்து - சித்திர எழுத்து' என்று நச்சினார்க்கினியர் பொருள்கூறலை நோக்க, சிலப்பதிகாரக் காலத்திலும் ஒருவகைச் சித்திர எழுத்துக்கள் குறிப்பிட்ட சில காரியங்களுக்கேனும் வழக்கில் இருந்தன என்று கருத இடமுண்டாகிறது. இவை நிற்க.

இந்திய எழுத்துக்கள்

வரலாற்று உண்மைக்குப் பொருந்தியனவாக ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொண்ட இந்திய எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை (1) பிராமி, (2) கரோஷ்டி, (3) திராவிட, (4) யவனாணியா எனபன. இவற்றுள் யவனாணியா என்பது கிரேக்கரும் அவரைச் சார்ந்தவரும் பயன்படுத்திவந்தவை. 'கரோஷ்டி' என்பது வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதியில் ஏறத்தாழக் கி. பி. 4-ஆம் நூற்றாண்டுவரை வழக்கில் இருந்த எழுத்து முறையாகும். பிராமி எனபது அசோகனுடைய

கல்வெட்டுக்களிலும், கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் தென் இந்தியக் குகைகளிலும் காணப்படும் எழுத்து முறையாகும். பிராமி எழுத்து முறை மேற்சொன்ன இரண்டு எழுத்து முறைக்கும் மாறுபட்டது. பிராமி எழுத்துக்களை நன்கு ஆராய்ந்த அறிஞர்கள், அது தமிழுக்கென அமைக்கப்பட்ட குறியாகலாம் எனக் கருதுகின்றனர். திராவிட என்பது வட்டெழுத்து. உருவெழுத்து முதலிய நிலைகளைத் தாண்டி அக்ஷரவரிசை எழுத்துக்களைப் பெற்ற பிராமிலிபி, ஏறத்தாழக் கி.மு. 3-ம் நூற்றாண்டில் தமிழகத்திற் புகுந்து, நாட்டு நிலைக்கேற்பச் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வட்டெழுத்தாக மாறியிருத்தல் வேண்டும் என்று அறிஞர் கருதுகின்றனர். வட்டெழுத்து ஒரு காலத்தில் தமிழகம் முழுதும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். தொண்டை நாட்டிலும் காவிரிவரையுள்ள தமிழகத்திலும் பல்லவராட்சி ஏற்பட்ட பிறகு, பல்லவரால் போற்றி வளர்க்கப்பட்ட பிராமிலிபியின் வழிவந்த கிரந்தமும், அதனை ஒட்டி வளர்ந்த கிரந்தத் தமிழும் வழக்காறு பெறத் தொடங்கின. அக்காலத்தில் பல்லவராட்சி ஏற்படாத பாண்டியநாடு, சேரநாடு, கொங்கு நாடுகளில் வட்டெழுத்து வழங்கிவந்தது.

பல்லவர்க்குப் பின்பு தென்னிந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட சோழர் காலத்தில் கிரந்தத் தமிழே பெருவழக்குப் பெற்றது

சோழர்க்குப்பின் தமிழகத்தை ஆண்ட விஜயநகர அரசர் காலத்திலும் மகாராஷ்டிர மன்னர்கள் காலத்திலும் நாகர எழுத்துக்கள் தமிழகத்தில் இடம்பெற்றன.

இந்திய சாஸனங்கள்

இந்திய எழுத்துக்களைப்பற்றி இதுகாறும் கூறப்பெற்ற விவரங்கள், இந்தியாவில் உள்ள கல்வெட்டுக்களிலிருந்தும் செப்பேடுகளிலிருந்தும் தெரிவனவாகும். இந்திய சாஸனங்கள் எவ்வாறு தோன்றலாயின என்பது அடுத்துவரும் வினவாகும். பிராமி எழுத்துக்களைகொண்ட அசோகன் காலத்துக் கல்வெட்டுக்கள் பௌத்த சமயக் கொள்கைகளை மக்களிடைப் பரப்புவதற்காக உண்டானவையாகும். பின்வந்த பட்டயங்களும் கல்வெட்டுக்களும் கல்விமிற் பெரியவர்க்கும், வீரர்கட்கும், கோயில்கட்கும், அவ்வப்போது நிலதானம் முதலிய தானங்கள் செய்யப்பட்டபோது எழுதப்பெற்றவை யாகும். ஒரு பொருளைக் குறித்துக் கல்லில் வெட்டி, அக்கல்லைப் பலரும் சேர்ந்து பார்க்கத்தக்க கோயில் போன்ற பொது இடங்களில் பதித்து, மக்களைக் காணச்செய்வது நம்நாட்டில் இன்றளவும் இருந்து வரும் வழக்கமாகும். போரில்

இறந்த வீரனுக்குக் கல்நாட்டி, அதனை அடியில் அவனுடைய பெயரையும் சிறப்புக்களையும் வெட்டுவித்தல் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

அரசர்கள் கற்றூண்களை நாட்டி, அவற்றில் தங்கள் வெற்றிகளைக் குறிக்கத் தொடங்கினது முதல் கல்வெட்டுக்கள் நாட்டில் மதிப்படையலாயின. ஏறத்தாழக் கி. மு. 170 இல் கலிங்கப் பேரரசனாக இருந்த காரவேலன் உதயகிரியில் நாட்டிய ஹாதிகும்பாதூண் கல்வெட்டுக் குறிக்கத்தக்கது. தனக்கு 117 ஆண்டு கட்கு முன்பு (ஏறத்தாழக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்) தமிழக வேந்தர் ஒற்றுமையுற்று வலிமையோடிருந்தனர் என்பதை அவன் அக்கல்வெட்டில் குறித்துள்ளான். மோரியப் படையெடுப்புத் தமிழகத்தில் நடந்து படுதோல்வியுற்றது என்பதைச் சங்க நூல்களின் வாயிலாக அறிகிறோம். ஆயின், அதன் காலம் புலப்படவில்லை. காரவேலன் கல்வெட்டுச் சான்றை நோக்க, வலிமிக்க மோரியர் படையெடுத்துத் தோல்வியுற்றதையும் காண, அத்தோல்விக்குத் தமிழரசர் ஒற்றுமையே காரணம் எனபதையும், அப்படையெடுப்பின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் ஊகித்தல் தவறாகாது. இவ்வாறு இந்திய வரலாறு கட்ட, இலக்கியத்திற்கு உறுதுணையாக உதவுவது கல்வெட்டாகும்.

கி. பி. நான்காம் நூற்றாண்டில் பேரரசனாக இருந்த சமுத்ரகுப்தன் கி. பி. 340-இல் தக்கணத்தின் மீதும் தென்னிந்தியாவின் மீதும் படையெடுத்து வந்தான். அவனது

டாக்டர்
மா. இராசமாணிக்கனார்,
எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்.,
பி. எச். டி.

வெற்றியைக் குறிப்பது அலகாபாத்தில் உள்ள தூண்கல்வெட்டாகும். அதில் பல அரசர் பெயர்களும் அவர்கள் நாடும் ஊரும் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்த குறிப்பு-காஞ்சியை விஷ்ணுகோபன் என்ற பல்லவன் ஆண்டு வந்தான் என்பது. பல்லவர் என்ற சொல்லே சங்க நூல்களில் இல்லை. சங்க காலத்தின் இறுதியில், காஞ்சி சோழராட்சியில் இருந்ததை மணிமேகலை குறிக்கிறது. கி. பி. 340-இல் காஞ்சியில் பல்லவ வேந்தன் இருந்தான் என்பதை நோக்க, பல்லவர் சங்கப் பாடல்களில் குறிக்கப் படாமையையும் நோக்க, சங்கத்தின் இறுதிக் காலம் ஏறத்தாழக் கி. பி. 300 என்று கொள்ளச் சமுத்திர குப்தனது வெற்றித்தூண் கல்வெட்டு உதவிபுரிதலைக் காணலாம்.

வடநாட்டு ஹர்ஷனையே புறங்கண்ட சாளுக்கிய வேந்தனை இரண்டாம் புலிகேசி என்பவன் சுமார் கி.பி. 642-இல் நரசிம்மவர்மனிடம் தோல்வியுற்றான். அவனது தலைநகர் வீழ்ந்தது. அங்கொரு வெற்றித்தூண் எழுந்தது. அதில் பல்லவன் வெற்றி பெற்றதையும், வாதாபி பல்லவராட்சியில் 13 ஆண்டுகள் இருந்ததையும் அத்தூண் கல்வெட்டுக் குறிக்கிறது. தம் அரசன் வரலாற் றைன்று வட

(10-ம் பக்கம் பார்க்க)



"நாற்காலியில் நிம்மதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே. இது என்ன் நியாயம்?"

"நான் வேறு எங்கிருப்பேன்? கார்ப்பொரேஷன் குப்பைத்தொட்டியிலா?"

"கோபித்துக்கொள்ளாதீர்கள். அவர்கள் இன்னமும் சம்பளம் கொடுக்காமலிருப்பதற்கு என்மீது தாவினால், நானென்ன செய்வேன்."

"ஹூம்."

"படுக்கையறையில் குழந்தை நிம்மியின் பூட்ஸை பாலிஷ் செய்து கொண்டிருக்க வேண்டுமல்லவா இந்நேரத்தில்? அவை எவ்வளவு அழுக்காயிருந்தன. சிறிதுநேரத்தில் வெளியே செல்ல இருக்கிறோமென்பதை மறந்துவிட்டீர்களே!"

"சரி, சரி, நான் நிம்மியின் பூட்ஸைத் தொடமாட்டேன்."

"சமையலறையிலிருந்து வரும் போது பாலிஷ் போடுவதாக வாக்களித்துவிட்டுத்தானே வந்தீர்கள். நானும் நம்பினேன். ஆனால் ஒன்றும் செய்யாமல் சோம்பேறியாய் அமர்ந்துகொண்டிருக்கிறீர்கள்."

"எனக்குத் தலைக்குமேல் வேலையிருக்கிறது."

"மச்சுப்பலகையை வாய்பிளந்தவாறு பார்த்துக்கொண்டும், முழங்காலில் விரல்களால் தட்டிக் கொண்டும்...."

"நீ அப்படியா நினைக்கிறாய்? அதற்குக் காரணம் எனது உள்ளத்தை நீ சரிவர உணராததே. என் உள் உணர்வுடன் நீ என்றும் நெருங்க முயற்சியெடுத்துக் கொண்டதில்லை."

"அப்புறம்?"

"நான் ஒரு கலைஞனென்பதை நீ எப்போதும் உணர்ந்ததில்லை. திருமணமாகிப் பன்னிரண்டு ஆண்டுகளாகியும் நான் உன்னளவில் அந்நியனே."

"உங்களுடைய ஒவ்வொரு நரம்புடனும் நாருடனும் நான் நெருங்கிய பரிச்சயங் கொண்டுள்ளவளே. தற்சமயம் உங்களை உறுத்திக் கொண்டிருப்பது எது என்று எனக்குத் தெரியும். அவர்கள் சம்பளம் கொடுக்காததாலே..."

"என்னை நீ நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொண்டிருந்தால் நான் இச்சமயம் சிந்தனையில் மூழ்கியிருந்தேனென்பதைத் தெரிந்துகொண்டிருப்பாய். என் உள்ளத்துள்ளே ஓர் எண்ணம் உதித்துள்ளது. சமூக முக்கியத்துவமும், தனி நபர் முக்கியத்துவமும் பெறும் வகையில் வியாபிக்கவிருக்கும் இலக்கிய சாதனையாக அது வருங்காலத்தில் விளங்க இருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் திருமணத்தின் மூலம் உவகை பெறுவது எப்படி என்ற எண்ணம் தோன்றி எனதுள்ளத்திலே ஆராயப்பட்டு வருகிறது."

"மணவாழ்க்கையைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்களா?"

"ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கிறேன், சந்தோஷமான மணவாழ்க்கையைப் பற்றி."

"சந்தோஷமான மணவாழ்க்கையைப் பற்றி தீர்க்கமாக சிந்திப்பதற்குப் பதில், தாங்கள் அவ்வாறு வாழவேண்டுமென்று நான் எவ்வளவோ விரும்புகிறேன். வாழ்வைப்பற்றிய சிந்தனையற்ற வாழ்வு எவ்வளவோ மேலானதாகும். சிந்தனை வாழ்வைக் குட்டிச்சுவராக்குகிறது."

"நீ ஒரு பெண் ஜன்மமான காரணத்தால் அபத்தங்களை வாரியிறைக்கிறாய். சிந்தனையின் மாபெரும் எதிரி பெண்ணே. நீ சிறு தேனும் எண்ணிப்பார்த்திருந்தால், சிந்தனையற்ற வாழ்வு வாழ்வேயாகாது என்று துணிந்து முடிவு கொண்டிருப்பாய்; அத்தகைய வாழ்வு வெறும் மண்ணேயென்று தெரிந்திருப்பாய். சிந்தனைதான் வாழ்க்கைக்குத் தீனி."

"நிம்மியின் பூட்ஸு என்னவது? காலத்தை வீணாக்காமல் அவற்றுக்குப் பாலிஷ் போட்டிருந்தால், நம்மிருவர் வாழ்க்கையும் மிகப் பெருமளவிற்கு மகிழ்ச்சி பயப்பதாயிருந்திருக்குமல்லவா?"

"பெண் பேசுவது போன்றே நீ பேசுகிறாய். வாழ்க்கையைப்பற்றியும் பூட்ஸைப்பற்றியும் ஒரே மூச்சில் பேசுபவளே ஸ்திரீ. உன் பிதற்றல் போதும். நான் தனிமையை விரும்புகிறேன். சந்தோஷ மணவாழ்க்கையின் ரகசியத்தை நான் கண்டுபிடித்துவிட்டேன். உயர்ந்த இலக்கிய ஓவியமாகத் தீட்டும் முயற்சியிலீடுபட்டுள்ளேன்."

"அந்த ரகசியம் என்னவோ?"

"என்னிடத்தில் வாதம் செய்யக் கூடாது. அவ்வளவுதான்."

"சமயா சந்தர்ப்பமின்றி என்னுடன் வாதம் செய்துகொண்டிருக்கும் தாங்கள் அவ்வாறு வாதம் செய்யாத நிலையில் எங்ஙனம் சந்தோஷம் காணப்போகிறீர்களோ அதை என்னால் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை."

"சத்தம் போடாதே. ஆணவமாய் வாதித்துக்கொண்டிருத்தல் பேய்க்குணமாகும். மணவாழ்க்கையெனும் கப்பல் வாதமெனும் பாறைமீது மோதி சுக்கு நூறாகி விடுவது கண்கண்ட உண்மை."

"ஆனால் நம்திருமண நாள் தொடங்கி இன்றுவரை உங்கள் வாணாளை வாதத்தில் தானே கழித்து வருகிறீர்கள்."

"நான் வாதம் செய்துகொண்டிருக்கவில்லையே. உன்னிடமுள்ள முரண்பாடுகளைத் திருத்த முயன்று கொண்டிருந்துள்வேன்."

"மிக்க நன்றி; நான் புளகாங்கிதமடைகிறேன். நியாயத்திற்காக ஒரு மனைவி தர்க்கம் செய்தால், அது வாதம்; ஒரு புருஷன் வம்பு பேசினால் அது மனைவியின் முரண்பாடுகளைத்திருத்தி முயற்சிப்பதாகிறது."

"சீனாவின் நீள் சுவர் போன்ற அளவினதே உனது நா. பொதுவாகவே பெண்களிடத்தே காணப்படும் குறைபாடு அதுதான். சீனாவின் நீண்ட சுவர்போல, நா படைத்த காரணத்தால் வாதமிட்டுக்கொண்டேயிருக்கின்றனர் பெண்கள்."

"சீனாவின் குள்ள உருவம் படைத்த பழைய காலத்துக் கிழவிகளின் குறுகிய குணம் படைத்தவர்களே நீண்ட சுவர் ஒத்த நா படைத்த பெண்களெனப்படுவோரின் கணவர்கள்."

"குறுக்கே குறுக்கே பேசும் மிக வெறுக்கத்தக்க வழக்கம் உன்னை விட்டு எப்போதும் நீங்கிவிடாது போலும். வழுக்கலான, ஒரு நிலையற்ற, நீண்ட நா, உனக்கு மட்டுமில்லை; எல்லா பெண்களுக்கும் அல்வாறே. பேச்சு; பேச்சு; பேச்சு; சதா பேச்சு. எந்நேரமும் பேச்சு. கோள் சொல்லுதல், தொல்லை கொடுத்தல், தினையைப் பனையாக்குதல், அவதூறு கூறுதல், பொய் பேசுதல் தூஷணை பொழிதல் வம்பை விலைகூறுதல் ஆகிய கல்யாண குணங்களே அவர்களின் வாழ்க்கை லட்சியங்கள். திருத்தப்பட அவர்கள் ஒப்பமாட்டார்கள். புருஷன் ஏதேனும் சொல்ல வாயைத் திறந்தவுடனே, அவன் மனைவி, அவன் காதுகள் துளைபடும் வண்ணம் வேண்டாதததை சம்பந்தமில்லாததைக் கூறுவாள் கொஞ்ச நேரமேனும். வினா வெழுப்பி, எதிர்த்து, தர்க்கமிட்டு, வாதம் செய்து பொதுவாக எதையாவது பேசுவாள் மனைவி. ஒரு பெண் அவ்வாறு நர்த்தனமாடத் தொடங்கிவிட்டாலோ அகிலம் படைத்த ஆண்டவனாலுங்கூட அவளாகவே ஓயும்வரை அவளை நிறுத்த முடியாது. பெண்ணினத்தின் பெருங்கேடுமுடிவேயிலாதவாதம்."

"முடிவேயிலாத வாதப்பேச்சு இது சமயம் அவ்விடத்திலிருந்து தான் சரமாரியாகக் கிளம்பிற்று என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."

"நிறுத்து. அது தவிர, படித்த பெண்களென்போர்தாம் இந்த அம்சத்தில் பெருங் குற்றவாளிகள். பல்கலைக்கழகக் கல்வி அவர்களில் அநேகரை நாஸ்திகத்திற்கே இழுத்துச்சென்றிருக்கிறது. அவர்கள் உள்ளங்களிலே இருள் பரவிவிட்டிருக்கிறது. ஆண்களுக்கு என்றிருந்த உத்தியோக மண்டலத்தைக் கைப்பற்றத் துணிந்துவிட்டனர்; பொருளாதார சுதந்திர நிலை எய்திவிட்டனர். ஆண்மக்களின் அவல நிலைக்குக் காரணமாகி, வாழ்க்கையென்ற பாதையில் பிதற்றிக்கொண்டே செல்கின்றனர் படித்த பெண்கள். உயர்தரக் கல்வியின் கதவுகள் பெண்டிருக்குத் திறந்துவிடப்படக் கூடாது என்று எனக்கு மட்டும் சர்வாதிகாரமிருந்தால், சட்டம் போடுவேன். குடும்பத்தை நிர்வகிக்கும் கலை, குழந்தைகளை பேணி வளர்க்கும் முறை ஆகியவற்றுடன்கூட கணவர்களிடம் மறுத்துப் பேசாது அடங்கி ஒடுங்கி நடக்கும் தன்மைக்கான சூத்திரங்கள் சிலவற்றையும் பெண்களுக்கு நான் போதிப்பேன்."

"ஓஹோ அப்படியா, இப்பொழுதல்லவோ உண்மை தெரிகிறது. முன்கூட்டியே எனக்குத் தெரிந்திருக்கும் பட்சத்தில், கல்லூரிக்குச் செல்லவோ, சென்றபின் பட்டம் பெறவோ, அதற்குப்பின் வேலை தேடியலையவோ, என்னுடைய ஊதியத்தைக் கொண்டுவந்து உங்கள் சம்பளத்துடன் சேர்த்து குடும்பத்தை நடத்தவோ நான் விரும்பியிருக்கமாட்டேனே."

"கேவலம்; மகா கேவலம், உன்னுடைய தாழ்வு மனப்பான்மை

(10-ம் பக்கம் பார்க்க)

சொத்துக்கு வாரிசு!

ஒரு அமெரிக்கர் இறந்தபின், அவருடைய சொத்து இன்னின்னவருக்கு இப்படி இப்படியாகத்தான் பிரித்துக்கொடுக்கப் படவேண்டும் என்று தீர்மானமாகத் திட்டம் செய்யப்பட்ட சட்டம் எதுவும் கிடையாது. தமது நிலங்கள், செல்வம், சொந்த உடைமைகள் ஆகியவற்றை எவருக்கேனும் விட்டுச்செல்லும் சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுள்ளார்.

பெரும்பாலும் நடைமுறையிலிருந்து வரும் வழக்கப்படி தமது சொத்தின் பெரும்பகுதி மனைவிக்கும் பெண் குழந்தைகள் உட்பட எல்லா மக்களுக்கும் சேரவேண்டுமென்று இறுதி உயில் எழுதிவைப்பார். அவர் விருப்பம் வேறு விதமாக இருக்கும் பட்சத்தில் தமது குடும்பத்தை விடுத்து, தூரபந்து எவருக்கேனும் அல்லது தர்ம ஸ்தாபனத்துக்கேனும் அல்லது ஒரு நண்பருக்கேனும் சொத்தின் பெரும்பகுதியை எழுதிவைக்கலாம். ஆனால், ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அமெரிக்கர்களின் சொத்துரிமை சட்டங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ள தனி நாடுகளில் பெரும்பாலானவை இறப்பவர்தம் சொத்தில் மூன்றிலொரு பகுதியையேனும் மனைவிக்கும் மக்களுக்கும் விட்டுச் செல்லவேண்டுமென்று நிர்ணயித்துள்ளன.

அஃதேபோல் தங்கள் விருப்பப்படி பெண்களும் சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் விட்டுச்செல்லலாமென்ற உரிமை பெற்றுள்ளார்கள்.

சட்டப்படி உயில் ஒன்றையும் எழுதிவைக்காமல் ஒருவன் இறந்துவிடும் பட்சத்தில் அவன் குடியிருந்த நாட்டில் நடைமுறையிலிருந்து வரும் வார்சுரிமை சட்டங்கள்படி அந்த சொத்துப் பகிர்ந்தளிக்கப்படும், சட்டத்தின் வாசகமும் கருத்தும் வெவ்வேறு நாடுகளில் வேறு வேறு விதமாக இருப்பினும், இறந்தவரின் மனைவி அல்லது கணவன், பால் பேதமின்றி மக்கள் ஆகியவர்களுக்கு சொத்தின் ஒரு பகுதியேனும் சேர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இறந்தவருக்குக் குடும்ப பந்தம் எதுவுமில்லையென்றால் நெருங்கிய பந்துக்கள் சொத்தின் உரிமையாளர்களாகிறார்கள். வார்சேயிலாதவகையில் ஒருவர் இறந்து படும் அசாதாரண நிலையில், அவர் முழு சொத்தும் அரசாங்கத்தின் உடைமையாகிவிடும்.



முன்னுரை

ஒரு வரலாற்றையோ வரலாற்றுப் பட்டை திட்டப்பட்ட கற்பனைக் கதையையோ தூக்கி வைத்துக்கொண்டு நாடகம் சமைக்கும்போது, நாடகம்வரைபவன் கவனிக்கவேண்டிய முறை ஒன்று உண்டு. அது தான், முழுக்க முழுக்க அந்த வரலாற்றை அறிந்துகொண்டு, கற்பனை கலந்து நாடகம் பிடித்தலாகும். அம்பிகாபதி நாடகத்தை எழுதலாம் என நான் எண்ணியபோது அது வரலாறு கற்பனையா என்பது புரியாமல் குழப்பம் என்னை ஆட்கொண்டது.

அது வரலாறுதான் என முடிவு கட்டிக்கொண்டு ஆதாரம் தேடினேன். கிடைத்த ஒவ்வொரு 'ஆதார'மும் என் முடிவைப் படிப்படியாகக் குறைத்து, அவநம்பிக்கையைக் கணிசமான அளவில்கொண்டு நிறுத்தின! கம்பனுக்கு அம்பிகாபதி என்றொரு மகன் இருந்தானா? இது என் முதற்கேள்வி. இதற்குப் பதில்காண இலக்கிய ஆய்வாளர் சிலரது நூற்களை எடுத்துப் புரட்டியபோது, அதில் ஒருவர்கூட எனக்கு உதவிபுரிய மறுப்பதைக் கண்டேன். உண்டு அல்லது இல்லை என்கிற இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்ள நான் விரும்பினேன். ஆனால் அவர்களில் பலரோ உண்டு என்றோ இல்லை என்றோ முடிக்காமல் "உண்டா இல்லையா?" என்கிற கேள்வியையே கேட்டு நிறுத்தியிருந்தனர், என்னைப்போல்! இறுதியில் தோழர் அ. ச ஞானசம்பந்தன் எழுதிய 'கம்பன்கலை' என்ற நூலைப் புரட்டியபோது அதிலே ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் அமபிகாபதியைப் பற்றிய குறிப்புக் கிடைத்தது. அதன்படி, அம்பிகாபதி என்னும் பிள்ளை கம்பனுக்கு உண்டு என்கிற எண்ணம் இரண்டே சத விகிதம் அதிகரித்தது. ஆமாம்; அவர் கூறியுள்ள காரணம் இருக்கிறதே, அது இரண்டே சத விகிதம்தான் என் எண்ணத்தை வளர்த்தது. தசரதன் தன் மகனைப் பிரிய நேர்ந்து புலம்பும்போது, மிக உருக்கமாகப் புலம்ப வைத்திருக்கிறானும் கம்பன். இது, வெறும் கற்பனையாய் மட்டும் சாத்தியமில்லையாம். தன் மகனைப் பறிகொடுத்த ஏக்கமே அவனை அப்படி தசரதனின் உடலுக்குள் புகுந்து புலம்ப வைக்கிறதாம். ஆகவே, அம்பிகாபதி என்றொரு பிள்ளை கம்பனுக்குஇருந்திருக்கத்தான் வேண்டுமாம். இந்த மனோ தத்துவ ஆராய்ச்சி, என்உடலை உலுக்கி எடுத்தது! உணர்ச்சி பாவத்தைப் பாதையாக்கிக் கொண்டு குடும்ப வரலாற்றைக் கூறுபோட்டுப் பார்க்கிற ஆராய்ச்சியல்லவா இது! அதாவது, காதல் பற்றி ஒருவன் உருக்கமாகப் பாடினால், அவன் பிரமாதமாகக் காதலித்திருக்க வேண்டும் என்றும், சாவுபற்றி உருகினால், அவன் குடும்பத்திலே பலபேர் செத்திருக்க வேண்டுமெனவும், கெட்டவர்களை முழுக்கப் படம்பிடித்தால் அவன் குடும்பத்திலே பெரும்பாலோர் கெட்டிருக்கவேண்டுமெனவும் இந்த ஆராய்ச்சி நமக்கொரு புதிய தத்துவத்தைப் போதிக்கிறது! எப்படியோ, "மகன் இருந்தான், கம்பனுக்கு" என்று எண்ணுகிறவர்களுக்கு இது ஆதாரமாகலாம்! ஆனால், கொஞ்சம் உள்ளே புகுந்து வேறு குறிப்புக்களை பார்த்தால், இந்த ஆதாரமும் முழுச் சொத்தையாகிற பரிதாபத்தைக் காணுவோம். கம்பன், அம்பிகாபதி வாழுங் காலத்திலேயே இராமகாதையைப் பாடி அரங்கேற்றி விட்டதாகக் காணப்படும் குறிப்புகள்தான் அவை! அதற்குப் பிறகுதான் அம்பிகாபதி சொல்லப்பட்டதாக அவை கூறுகின்றன. இராமகாதை பாடி முடிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டபின் அம்பிகாபதி கொல்லப்பட்டிருந்தால், தசரதன் ஒப்பாரி அதோடு உணர்ச்சியால் ஐக்கியப்பட்டிருக்கக் காரணம் இல்லையே! ஒருவேளை, மகனின் பிரிவுக்குப் பிறகு, கம்பன், தசரதனின் சோகக் கட்டத்தைத் திருத்தி எழுதினானோ? புரியவில்லை! ஆகவே, உண்டு என்கிற முடிவு ஞானசம்பந்தன் குறிப்பில் ஓட்டையாகவே நிற்கிறது!

'அபிதான சிந்தாமணி'யில் காணப்படும் குறிப்பு, 'அம்பிகாபதி கம்பனின் மகன்' எனத்தான் கூறுகிறது. இராமகாதைக்குச் 'சம்பநாடன்னுமை செவி' என்னும் சிறப்புப்பாயிரம் கூறியவன் இவனாகிய அவன் மகன்தான் எனவும் அது வெளிச்சம் போடுகிறது. தனிப் பாடற்றிரட்டிலே கம்பன் பாடியதாகக் காணப்படும் சில பாடல்களும் அம்பிகாபதி பாடியதாகக் காணப்படும் சில பாடல்களும் இருவருக்கும் உறவைக் குறிக்கின்றன. தமிழ்த்திரு மறைமலை அடிகளார் எழுதிய 'அம்பிகாபதி அமராவதி' நாடக நூலின்கண், பதிப்புரை வரைந்துள்ள திரு. அ. கனகராயர் அவர்கள், "சோழன் மகள் அமராவதியும் கம்பன் மகன் அம்பிகாபதியும் காதல் புரிந்த கதை, மெய்யாகவே நிகழ்ந்ததாகும்" என வரைகிறார்கள்.

'அம்பிகாபதி கோவை'யைப் பதிப்பித்த தோழர் மு. அருணாசலம் அவர்கள், "அம்பிகாபதி என்பான் கம்பனின் மைந்தன்" எனும் முடிவை ஓரளவு ஆதரிக்கிறார். (ஆனால், 'கோவை பாடியவன் அவனல்ல' என்கிறார்.)

இப்படிப் பலரும், பழங் கதையை ஒட்டித் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

"அம்பிகாபதி என்னும் பெயரோடு, இவனைத் தவிர வேறு யாராவது இருந்திருக்கிறார்களா?" இது என் இரண்டாவது கேள்வி.

'கம்பனுக்கு சம காலத்தவன் என்றும் குலோத்துங்கன் அவையில் இருந்தான் எனவும் கருதப்படும்ஒட்டக்கூத்தனுக்கு அம்பிகாபதி என்றொரு சீடன் இருந்ததாகச் சில குறிப்புகள் கூறுகின்றன.

"ஏகாவடமென்னிரு
கொங்கையின்மேல்
ஆகாவடமான தறிந்திலையே."

எனத் தொடரும் செய்யுள், கூத்தரின் மாணாக்கரான அம்பிகாபதி எழுதியதென "அபிதான சிந்தாமணி" ஆசிரியரும், அது கம்பன் மகன் எழுதியதே என மு. அருணாசலமும் கூறுகிறார்கள். "ஒட்டக்கூத்தரின் மாணக்கர்" என்று, தோழர் மு. அருணாசலம் அவர்கள் பொதுமையிலேயே பெயரின்றிக் குறிப்பிடும் நபர்தான், அபிதான சிந்தாமணி ஆசிரியரால் "அம்பிகாபதி என்ற பெயருள்ள மற்றொருவன் குறிப்பிடப்படுகிறான்.

மாவுறங்கின புள்ளுறங்கின
வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின இன்னுமென் மகள்
கண்ணுறங்கிலள் கையனைக்
கோவுறங்கு கடைத்தலைக்குல
தீபவள்ளை குதட்டநின்
ஆவுறங்கு புகாரசஞ்சல
அஞ்சலென்ன அடுக்குமே!

என வரும் பாடல் கம்பன் மகன் அம்பிகாபதி எழுதியது என மு. அருணாசலம் உட்படச் சிலர் கூறுகிறார்கள். அது ஒட்டக்கூத்தரின் மாணக்கரும் ஷை அம்பிகாபதியும் சேர்ந்து பாடியது என தமிழ் நாவலர் சரிதை கூறுகிறது. இவற்றிலிருந்து நாம் கண்டுகொள்வது, கூத்தனுக்கு ஒரு சீடன் அம்பிகாபதி என்ற பெயரில் இருந்திருக்கிறான் என்பதே! ஆக அம்பிகாபதி இரண்டு!

தண்டியலங்காரம் செய்த தண்டி என்பாருக்கு அம்பிகாபதி என்றொரு தந்தை இருந்ததாக, அந்நூலில் காணப்படும் சிறப்புப்பாயிரம் கூறுகிறது:

திருந்திய மணிமுடிச்
செம்பியன் அவையத்து
அரும்பொருள் விளங்க
யாப்பின் வகுத்தோன்
ஆடகமன்றத்து நாடக நவிற்றும்
வடநூலுணர்ந்த
தமிழ் நூற்புலவன்
பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பிகாபதி
மேவருந் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சீர்த்தித்
தண்டி என்பவனே;

இதில் வரும் அம்பிகாபதி, கம்பனின்மகன் எனவும் தண்டி அம்பிகாபதியின் மகன் - கம்பனின் பேரன் எனவும், அபிதான சிந்தாமணி கூறுகிறது, இது சரியல்ல என 'கோவை' பதிப்பித்த மு. அருணாசலம்

கண்ணதாசன்

கூறுகிருர். தண்டி ஆசிரியரும் அவர் தம் தந்தை அம்பிகாபதியும் இவர்களுடன் சிறிதுகூட உறவற்றவர்கள் எனத்தான் காணப்படுகிறது. காதலிலேயே கொல்லப்பட்டதாகக் கூறப்படும் அம்பிகாபதிக்கு, ஒரு பிள்ளை எங்கிருந்து-யார் மூலம் பிறந்து - தண்டியாகியிருக்க முடியும்! கம்பன் காலத்துக்கு சுமார் முன்னூற்றைம்பது ஆண்டுகள் பிற்பட்டு, மற்ருெரு அம்பிகாபதி, வீரை அம்பிகாபதி என்ற பெயரில் இருந்திருப்பதாகத் தெரிகிறது. 'நெல்லை வருக்கக் கோவை' என்னும் நூல் இவரை ஆசிரியர் என்கிறது. ஆக, இந்த அம்பிகாபதிகளில், காதல் புரிந்து கழுத்தறுபட்டவன் கம்பன் மகனெனக் கூறப்படுபவனே என ஒரு மேம்போக்கான முடிவுக்கு வரலாம்.

"கம்பன் மகன் அம்பிகாபதிதான் கோவை செய்தவனு?" இல்லை என்கிருர் மு. அருணசலம். அதை, பத்திரிகைகள் மூலம் இரண்டொரு வித்துவான்கள் ஆதரித்துள்ளனர். உண்மையும் அதுவாயிருக்கலாம். கம்பன் கையாண்டுள்ள சொற்களுக்கும் கோவையில் காணப்படும் சொற்களுக்கும் தொடர்பே காணும். யாப்பு முறைகூட முழுக்க முழுக்க பேதப்படுகிறது. ஆனுலும் இந்த ஆராய்ச்சிகளை ஒட்டி, அம்பிகாபதி கதைஎழுதியுள்ள சிலர், கோவை கம்பன் மகன் பாடியதேஎனஎழுதியுள்ளனர். (கம்பனின் பாட்டன் அம்பிகாபதி என்ற பெயர் கொண்டவன் என்று ஒருவர் கூறுகிருர். இந்த ஆய்வாளரின் பாதை மா பயங்கரம். நம்மால் டக்கமுடியாது.)

எப்படியோ போகட்டும். அம்பிகாபதி பற்றி வழக்கிலிருக்கும்செய்திகள்,வரலாற்று மயக்கம் கலந்த கற்பனை என்கிற முடிவுக்குத்தான் என்னல் வரமுடிகிறது. பொதுவாகக் காணப்படும் சில செய்திகளை ரம்பறுத்து வைத்துக் காண்டு அம்பிகாபதி கதையைப் பின்னுவது எளிதென ண்ணித்தான் நான் இந்த ாடகத்தை எழுதத் துவங்கி ள்ளேன். கம்பனுக்கு சம ாலத்தவர்கள் எனக் கூறப்டும் ஒட்டக்கூத்தன்; ஒரு ளவையார் ஆகியோரும் தவையானல் புகழேந்தியும் ந்த நாடகத்தில் வரத் தகுதி டையோரே! நன்னூல் இயற்ிய பவணந்தி முனிவனும் வர்களுக்குச் சம காலத்தனே என, ஒரு ஆசிரியர் றிக்கிருர். மற்றும் சில புலவர்ளும் எனது கற்பனையில் ண்டம் பிடிக்கப்பட்டு நாடகத்ில் விடப்பட்டால் தோழர்கள் யக்கம் போட்டு விழுந்துவிடக்டாது.ஏனென்ருல்,கிடைத்தற்கு மேலே செய்துவைக்கன் முயற்சிக்கிறேன்.

அம்பிகாபதி 'கதை'யை சுவைபட வரைந்தவர்கள் அதிகம் இல்லை. மறைமலை அடிகளாரின் நாடகம், வரலாற்று முறையும் வார்த்தைச் செழிப்பும் காவிய நயமும் கொண்டு இயங்குகிறதே தவிர, நாடக ருசியோ, கதை ருசியோ அதிகம் தரவில்லை. மற்றையோரில் 'காதல்' ஆசிரியர் தோழர் அரு. ராமனுதன் எழுதிய அம்பிகாபதி கதை சுவை தருகிறது. கட்டுக்கோப்பு நன்ருயிருக்கிறது. திரைப்படம் பிடிக்கப்பட்ட அம்பிகாபதியில் பாதி, ஷேக்ஸ்பியரின் கருவிலே உருவான ரோமியோஜுலியட் ஆகும். இதனை, வரலாற்றில் கலக்கப்பட்ட கடன் சரக்காகக் கருதலாமன்றி, நாடகாசிரியன் சுயபுத்தி கொண்டு, பழைய அடிப்படையை தனக்கு முறைப்படுத்திக்கொண்டதாகக்கருதல் ஏலாது.

என் ஆசை இதுதான். பழைய செய்திகளை முழுக்க முழுக்கக் கொண்டு, படிக்கவும் நடிக்கவும் பண்பான ஒரு நாடகம் சமைக்கவேண்டும். "அடுத்து என்ன அடுத்து என்ன" என்று கேட்கக்கூடிய அமைப்பாகவும் அது இருக்க வேண்டும்! அந்த அடிப்படையிலேயே இந்த நாடகத்தை எழுதுகிறேன். தமிழனுக்கு இருக்கிற ஒரே ஒரு காதல் ஓவியம் இந்த வரலாற்றுக் கதைதான். இதனைக் காவியமாகவே பாடவேண்டும் என நான் எண்ணியதுண்டு. அதற்கான ஓய்வு இப்போதைய நிலையில் இல்லாத காரணத்தால், நாடகமாக எழுதுகிறேன். என்ருே ஓர்நாள் அதைச் செய்யும் ஆசையும் இருக்கிறது.

இதனை - கம்பன் மகன் அம்பிகாபதி-அவன் பாடியது கோவை-கூத்தனுக்கும் கம்பனுக்கும் பகை - இராமகாதையில் அம்பிகாபதிக்குமாறுபாடு-அமராவதிக்கு போதித்த பாடமே கோவை- புகழேந்தி கம்பனுக்குத் துணை நின்ருன்-குலோத்துங்கன் மனதைக் கூத்தனே கலைத்தான்-என்கிற எண்ணங்களையே மனதிற் கொண்டு வரைந்துள்ளேன். காதற்காவியம்-நாடகம்-எழுதுவது வீரநாடகம் எழுதுவது போல் சுலபமானதல்ல என்பதைநான் உணர்கிறேன். கருத்துச் செழிப்பும் காவிய நயமும் காதல் நாடகத்துக்கு முக்கியம் என்பது எனக்குத் தெரியும். அது கெடாமல் இந்த நாடகத்தை முடிக்க நான் ஆசைப்படுகிறேன். அதற்காக, கால வரம்பு கெடாமல் சில செய்திகளை இதன்கண் கொண்டுவரப் போகிறேன். சுவையும் திகைப்பும் மாற்றி மாற்றி வழங்கும் ஒரு நாடகமாகஇதை உங்களுக்குத் தர முயற்சிப்பேன் என உறுதி கூறுகிறேன்.

களம் 1

காட்சி 1

இடம் : முடிகொண்ட சோழபுரத்தில் ஓர் தெரு.

நேரம் : மாலை.

[முடிகொண்ட சோழபுரத்து வடக்குவீதி. குதிரையில்செல்லும் வீரர்களும், தொழில் முடித்துத் திரும்பும் வணிகர்களும், வெளியூர் சென்று மாட்டு வண்டியில் திரும்பிக் கொண்டிருப்போருமாக, வீதி பொலிவு பெற்றுத் திகழ்கிறது. குதித்தாடும் இளஞ்சிறுரும் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றனர். ஒரு கிழவன், தோளில் ஒரு சிறு மூட்டையைத் தாங்கி, அதை இடது கையால் பிடித்தவாறும், வலது கையில் ஒரு ஊன்று கோல் கொண்டும் நடந்து வந்தவன், ஒரு மேல்மாடிச் சாளரத்தைக் கூர்ந்து பார்த்தவாறு நின்று விடுகிறுன். சாளரத்திலே ஒரு இளம் காதல் தம்பதிகள் உலகை மறந்தவாறு, சாளரத் திரைச்சீலையை மூடவும் மறந்து விளையாடிக்கொண்டிருக்கிறுர்கள். அந்த நங்கை, திடீரென்று திரும்பிப் பார்த்து, நாணத்தோடு மறைந்து கொள்கிறுள். அவள் கணவன், காரணம் தேடுபவன் போல், தெருப்பக்கம் பார்க்கிறுன். கிழவன் கடைவாயில் நீரொழுக--பரிதாபத்தோடு--அந்தக் காட்சியைக் காண்கிறுன். தெருவிலே நின்ற ஒரு இளைஞன் மெளனமாக இந்த நாடகத்தைக் காண்கிறுன். திரைச்சீலையை இழுத்து, சாளரத்தை மூடுகிறுன், கணவன். கிழவன், ஓங்கிச் சிரிக்கிறுன். இளைஞன், மெல்ல, கிழவனருகில் வருகிறுன்.]

இளை : ஏ, கிழவா ! ஓடம்பு சுருக்கம் விழுந்து போச்சு--இன்னும் என்ன சபலம் உனக்கு !

[கிழவன் மீண்டும் சிரிக்கிறுன்.]

இளை : முதுகுலெ ரெண்டு விழுந்தாத்தான் ஒஞ் சிரிப்பெ நிறுத்துவெ ! இல்லியா !

[கிழவன், பரிதாபமாக அவனைப் பார்க்கிறுன். அதே பார்வையை கம்பீரமாக்கிக் கொண்டு நிமிர்கிறுன். அவன் முதுகிலிருந்த சிறு மூட்டை கீழே விழுகிறது.]

கிழ : (சத்தம் போட்டு) ஓ ! பரிதாபத்துக்குரிய வாலிபர்களே ! உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது ! உங்களைச் சுற்றியிருக்கும் பயங்கரத்தை நீங்கள் உணரவில்லை ! இன்றைய வாழ்வுதான் உங்கள் கண்களுக்குத் தெரிகிறது ! நாளை உலகம்...! அது உங்களுக்கல்ல ! சாவுக்கு ! வலையத் தெரியாமல் போலி கம்பீரம் காட்டும் தூக்கு மரத்திற்கு ! மலைப்பாம்புபோல் சுற்றிக்கிடக்கும் தூக்குக் கயிற்றுக்கு ! நரநரவென்று சுழலப்போகும் பற்சக்கரத்திற்கு ! அட புத்திகெட்டவர்களே ! இங்கே என்ன நடக்கிறதென்று உங்களுக்குத் தெரியவில்லையா !

இளை : சரிதான் ! இவன் பித்தன்தான் !

[சாளரங்கள் அனைத்திலும் தலைகள் நீளுகின்றன. இளமங்கையர் காதலரோடு மலர்க்கொத்துச் சரிந்துவிழக் காட்சியளிக்கிறுர்கள். எல்லோர் கண்களும் அந்தக் கிழவனை ஆச்சரியத்தோடு பார்கின்றன. பழைய காதற்புறுக்களும் கூந்தலைச் சரிசெய்தவாறு காட்சி தருகின்றன.]

கிழ : (ஓங்கிச் சிரித்து) இன்றைக்குமட்டும் தான் ! நடக்கட்டும் உங்கள் காதல் நாடகம் ! பஞ்சணையிலே நெஞ்சுகலந்து கொஞ்சி விளையாடுங்கள் ! பட்டுச்சேலையைத் தொட்டுச் செல்லும் தென்றலுக்கு இடங்கொடாதீர்கள் ! கட்டி அணைத்து முகத்திலே உதட்டை வட்டமிடச் செய்யுங்கள் ! வாயிற்சிவப்பை விழிவாங்க, மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்க, நேயக்கலவி அமுதளித்து சுகம் காணுங்கள் ! கண்டுகளித்துக் கலந்திருங்கள் ! உண்டுகளித்து உறங்குங்கள் ! இரவு போனுல் உறவுபோய்விடும் ! பொழுது விடிந்தால் அழுது வடிவீர்கள் ! இது கடைசி நாள் ! ஓ ! காதலர்களே ! காதல் வரம்பைத் தொட்டுவிடுங்கள் ! அதன் அடுத்த எல்லையிலே சாவு தன் கோரப்பற்களைத் திறந்தபடி இருக்கிறது ! விரைவில் நடக்கட்டும் ! எட்டிப் பார்க்காதீர்கள் ! பொழுது விரைகிறது !

ஒரு குரல் : (சாளரத்திலிருந்து) ஏ கிழவா ! ஒனக்கென்ன பைத்தியமா ! வீண் அனுவசியமாகக் கத்திக்கிட்டிருக்கே--போ போ !

இளை : அவன் சும்மா போகமாட்டான் !

கிழ : ஆமாம் ! உங்கள் பிணங்களைச் சுமந்துகொண்டு தான் போவேன் ! சோடு சோடாகக் கிடத்தப்படும் உங்கள் சடலங்களைச் சுமந்துகொண்டு தான் போவேன் ! இல்லையென்றுல், எடுத்துப்போட நாதியிருக்காது ! எல்லோரும் போய்விடுவீர்கள் ! பருவம் வராமலே இலை உதிர்க்கும் மரம் சோழமரம் ஒன்றுதான் ! பச்சைத் தளிர்களைப் பொலபொலவென உதிர்ப்பது பொன்னிக் கரைதான் ! ஏ அனுதாபத்திற்குரியவர்களே ! எல்லோரும் சாவார்கள் ! இயற்கை ! எப்போது சாவோமென்பது யாருக்கும் தெரியாது ! உலகறிந்த பாடம் ! ஆனுல் ! சோழ நாட்டின் குடிமக்களே ! நீங்கள் எப்போது சாவீர்கள் என்பதுமட்டும் எனக்குத் தெரியும். காதலித்தால் சாவீர்கள் ! ஆம் ! கட்டிப்பிடித்தால் தொலைந்தீர்கள் ! இன்னும் நீங்கள் "படவேண்டிய கண்களில்" படவில்லை ! பட்டால்...ஐயகோ ! அம்மவோ !

[விழுந்து விழுந்து சிரிக்கிறுன். இளைஞன் பொறுக்க முடியாமல் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகிறுன். சாளரத்திலே நீண்ட தலைகள் ஏதோ ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்டு அவனைப் பார்த்த படி நிற்கின்றன. கிழவன், இளைஞனின் கைகளிலிருந்து விடுவித்துக்கொண்டு திரும்பி நிற்கிறுன்.]

ஒரு குரல் : (சாளரத்திலிருந்து) எய் ; நீ என்னதான் சொல்றெ ? புரியச் சொல்லு !

கிழவன் : (சிரித்தபடி) புரியவில்லையா ! இன்னும் புரியவில்லையா ! இதுகூடப் புரியவில்லையா ! அட, புரியாத பிறவிகளா ! நீங்களெல்லாம் இந்த உலகத்தில்தான் இருக்கிறீர்களா ? வட்டிலையும் கட்டிலையும் தவிர வெளி உலகமே தெரியாதா ! வயதுவந்தும் தொட்டிலில்தான் கிடக்கிறீர்களா !

[இப்போது, ஒரு சாளரத்தில் ஒரு இளங்காதலன், தன் காதலியைக் கைத்தாங்கலாகத் தாங்கியிருப்பதைக் கிழவன் பார்க்கிறுன்.]

ஐயோ ! ஐயோ ! பகிரங்கமாக நிற்கிறுன் பார் ! அட பாதகா ! சாவை அழைக்கிறுயா ! ஓடிவிடு உள்ளே !

[எல்லாத் தலைகளும், கிழவன் குறித்த சாளரத்தின் பக்கம் திரும்புகின்றன. காதலன் அணைப்பிலிருந்து காதலி விடுதலையாகிறுள்.]

துணிச்சல்காரனடா நீ ! முடிகொண்ட சோழபுரத்தில் இவ்வளவு தைரியமாகக் காதலிக்கிறுயேடா ! அட பரிதாபம் ! உனக்கு என் அனுதாபம் ! கேளடா ! கேள் ! **குலோத்துங்க சோழன் இன்னும் சாகவில்லை ! ஆளுவதும் அவன்தான் ! அவன்தானடா ஆளுகிறுன் !** இன்னும் காதலிக்கிறுயா ! காதலி ! காதலி !

[கிழவன் சிரிப்பு, படிப்படியாக அழுகையாக மாறுகிறது. அவன் பித்தன்போல் தோற்றமளிக்கிறுன். ஆச்சரியத்திலிருந்த சாளரங்கள் அச்சடித்த பதுமைகள் போலாகின்றன. இளைஞனும் தலைகுனிந்து கண்ணீர் சொரிந்து மெளனமாகிறுன். இடுகாட்டு அமைதி......... சிறுர்களும் மெளனமாகின்றனர். தூரத்திலிருந்து ஒரு பெண்ணின் குரல்--பாட்டாக வளைந்து வருகிறது.]

குரல்—பாடல் :

எங்கே ? அவர் எங்கே ?
தங்கமேனியில் தணல் படியாமல்
பொங்கி மகிழ்ந்துடல் பூரித்திருந்தவர்
எங்கே ? அவர் எங்கே ?

அங்க முழுதும் பல மலர் தாங்கி--
அசைந்த நங்கையை மனதினில் வாங்கி
திங்கள் சூடி ஓர் சிங்கம் போதல் போற்
சென்றிடுவானே தென்தமிழ்ப் புலவன்
எங்கே ? அவன் எங்கே ?

பூவிரி சோலையின் பொன்னெழில் மயிலைப்
புரிந்து வளைந்து நடந்தவள் ஒயிலை
காவிரி நதியே ! கண்டதில்லையோ !
காணத் துடிக்கிறேம் ! போன இடம் சொல்
எங்கே ? அவர் எங்கே ?

கிழவன் : (உரத்து) எங்கே போனுர்கள் ! இருக்குமிடம் எது ! மாண்டுபோனவர்களே ! மீண்டும் வந்து சொல்லுங்கள் ! ஐயோ ! எங்களுக்குத் தெரியவில்லையே ! கொன்றுனே கொலைகாரன் ! அவனுக்குத் தெரியுமா ! போன இடம் யாருக்கும் தெரியாது ! அனுப்பியவனுக்கும் தெரியாது ! வேடிக்கை ! வேதனை, சம அளவு கலந்த வேடிக்கை ! (சிரிப்பு)

[இப்போது ஒரு ரதத்தில் ஒட்டக்கூத்தனும் வாணியின்தாதனும் வந்துகொண்டிருக்கிருர்கள். கடந்து போகும்போது கிழவன் அவர்களைக் கூர்ந்து கவனிக்கிருன். அவன் கண்களில் அனல் பறக்கிறது.]

கிழ : இதோ போகிருர்கள் ! அயோக்கியர்கள் ! சாவின் தூதர்கள் ! எழுத்தாணி பிடித்த கயவர்கள் !

[ரதம் நிற்கிறது. கூத்தன் திரும்பிப் பார்க்கிருன். கிழவன் ஓடி ரதத்தின் முன் நின்று...]

கிழ : ஏ ரெட்டைத் தாழ்ப்பாள் கூத்தா ! முட்டாளே ! புகழேந்தியிடம் உதை வாங்கிய புத்திகெட்டவனே ! சோற்றுப் பிண்டமே ! நீ நாசமாய்ப் போக ! உன் குலம் அழிந்து சாம்பலாய்ப் போக ! உன் மகன் மணமாகாமலே மாண்டுபோக ! உன் மனைவி அழுது அழுது சாக !

[கிழவன் ஒரே மூச்சில் பேசிவிட்டு மூச்சுவிடுகிருன்.]

ஒட்டக் : (நிதானமாக) வசைப் பொழிவு முடிந்து விட்டதா, கிழவா !

கிழ : இல்லையடா ! இப்போதுதான் ஆரம்பம் ! அன்றைக்குக் கொலைக்களத்திலே கூட்டத்தோடு திட்டினேன் ! தனியாகப் பார்க்க வாய்ப்பில்லை ! அட கூத்தா ! அகப்பட்டுக் கொண்டாய் ! உன்னை விடமாட்டேன். பழிக்குப் பழி ! ரத்தத்துக்கு ரத்தம் !

ஒட்டக் : (ரதம் ஓட்டுவோனிடம்) ரதத்தை விடு !

[ரதஓட்டி பயமும் பரிதாபமும் கலந்த பார்வையில் கூத்தனைப் பார்க்கிருன்--கிழவனைப் பார்க்கிருன். சாளரத் தலைகள் ஆத்திரத்தோடு பார்க்கின்றன. ரதத்திற்கு எதிரே கிழவன் நிற்கிருன். கூத்தன் ஆத்திரமாக, ரதத்தை விடச்சொல்கிருன்--அவன் கொலைக்கே துணிந்து விட்டான். ரதஓட்டி தயாராகிருன். கிழவன் கைகளை முன்னுல் கட்டிக்கொண்டு நிற்கிருன்.]

ஒட்டக் : உம்...விடு ரதத்தை ! தட்டு குதிரையை !

[தொடரும்]

வாழ்வது எப்படியோ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொய்யும்' முறையில் அமையாமல் இருவரும் பரஸ்பரம் இன்பம் பரிமாறிக்கொள்ளும் வண்ணம் பரிமளித்துககொண்டு விளங்குகிறது. குழந்தைகளைப் பராமரிக்கவும் பக்குவமாகப் பலவகைப் பயிற்சிகளையும் கல்வியையும் தர எத்தனையோ வசதிகள் மாந்தருள் சிறந்து விளங்கவும், பலதுறைகளில் மற்றவர்கள் கண்டு விரும்பவும் மதிக்கவும் பணியவும் தக்க நிலைகளையடையவும் எத்தனை எத்தனை வாய்ப்புகள்! ஒரு புறத்தில் இன்பம் துய்க்கின்றனர். மற்ருெரு புறத்தில் தமதாற்றலை விளக்குகின்றனர்.

இந்த இன்பத்தையும் ஆற்றலையும் அவர்களுக்களித்துள்ளது அவர்களது பொருளாதார வளமேயாகும். அந்தப் பொருளாதார வளத்தை நீடித்துப் பெறவும் பாதுகாக்கவும் அவர்கள் கையாளும் முறைகளும், வழிகளும், சாதனங்களும் வாழ்வை இழந்த, ஆனுல் இழந்த வாழ்வை மீண்டும் பெற விரும்பும் நாடுகளும் மக்களும் பின்பற்றத் தக்கவையாகும்.

நெடுங்காலத்திற்குமுன் செல்வம்,பண்டங்களின் உருவிலேயே கணக்கிடப்பட்டது. அப்பொழுதெல்லாம் வாணிபம்கூட பண்டமாற்றுமுறையில்தான் நடைபெற்று வந்திருக்கிறது. ஒரு மூட்டை நெல்லைக் கொடுத்து ஒரு ஆட்டை வாங்கவேண்டும். ஒரு பசுவைக் கொடுத்து வீடு கட்டப் பயன்படும் பெரிய மரத்துண்டுகளைப் பெறவேண்டும். வேலை செய்பவர்களுக்கு நெல் அளந்து கூலி தரவேண்டும். இப்படியாக நெடுங்காலத்துக்குமுன் வாணிபம் தத்தித்தவழ்ந்து நடந்தது. பின்னர்தான் உலகின் பல பகுதிகளிலும் தங்கத்துக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டு, அதுவே வாணிபச் சாதனமாகப் பயன்படத் தொடங்கியது. தங்கம் நாணயச் செலாவணியாகப் பயன்படத் தொடங்குமுன் நெல் மட்டுமே நிறைய உள்ள ஒருவன் தனக்குத் தேவையான மற்ற பண்டங்களைப் பெற,அவையிருக்குமிடங்கள் எவ்வளவு தொலைவில மூலைக்கொன்ருக அமைந்திருந்தாலும் அத்தனை இடங்களுக்கும் நெல்லைக் கூடை கூடையாக அல்லது மூட்டை மூட்டையாகச் சுமந்துசென்றேயாகவேண்டும். தங்கம் நாணயச் செலாவணியாக மாறிய பின்பு, பத்துவராகனிடைத் தங்கத்துக்கு இரண்டு மூட்டை நெல் கிடைக்கும்; அதே பத்துவராகனிடை தங்கத்துக்கு ஒரு பசு கிடைக்கும்; அதே பத்துவராகனிடை தங்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட அளவு மரத்துண்டுகள் கிடைக்கும், என்ற நிலை பிறந்தது. இந்நிலையில் நெல்லைப் பல இடங்களுக்குச் சுமந்தோ வண்டியில் ஏற்றி இழுத்தோ செல்லாமல் உள்ளூரிலேயே நெல்லைப் பொன்னுக்கு விற்று பொன்னை ஒரு சிறு பையில் போட்டுக் கட்டி இடுப்பில் சொருகிக்கொண்டு பல ஊர்களுக்கும் சென்று வேண்டியவைகளைப் பெறுவது மிகவும் சுலபமான முறையாக அமைந்தது. ஆகவே, எல்லாப் பண்டங்களுக்கும் விலை பத்துப் பொன், இருபது பொன் என்று பொன்னின் அளவிலேயே நிர்ணயிக்கப்பட்டன. வாணிபமும் செழித்தோங்கியது. பண்டங்களின் நடமாட்டம் அதிகமானதோடன்றி தெளிவடைந்த வணிக முறைகளினுல் பண்டங்களின் போக்குவரத்திலும் ஒரு தெளிவும் வேகமும் பிறந்தன. பண்டங்களின் உற்பத்திக்கும் நல்ல உத்சாகமும் கிடைத்தது. தனிப்பட்டவருடைய செல்வமானுலும், நாட்டின் செல்வமானுலும் உள்ள பொன்னின் அளவைக்கொண்டே மதிக்கப்பட்டது. தங்கம் எந்த நாட்டிலும் எந்தப் பண்டத்தையும் வாங்கும் ஆற்றலைப் பெற்றது.

இதற்கு அடுத்த கட்டம்தான் ஒவ்வொரு நாடும் தமது சொந்த அரசின் முத்திரை பொறித்த வெள்ளி செம்பு, தோல் ஆகியவற்றில் நாணயங்களைத் தயாரித்த கட்டமாகும். நாணயங்களைத் தயாரித்த போதிலும் தங்கத்தின் மதிப்பு குறையவில்லை. அரசுகள் அமுலாக்கிய நாணயங்களை முதலில் மக்கள் நம்புவதற்கே, இவ்வளவு வெள்ளி அல்லது செம்பு நாணயங்களுக்கு இவ்வளவு தங்கம் கிடைக்கும் என்று அரசு அறிவித்து நடைமுறையிலும் தயங்காமல் அரசு தருவதற்குமுன் வந்த நிலை தேவைப்பட்டது- உலகம் முழுமைக்கும் தங்க அளவே பொது அளவாக விளங்கியது. ஒவ்வொரு நாட்டிலும் நடைமுறையிலிருந்த நாணயத்தின் மதிப்பு அதனுடைய வாங்கும் சக்தியின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பொறுத்து உயரவும் குறையவும் செய்கிறது.

—தொடர் கட்டுரை

வெளிவந்து விட்டது !

தமிழகத்திற்கு ஒரு புதிய படைப்பு

பொன்னாசி

உண்மை நிகழ்ச்சிகள் உறவாடும்
ஒப்பற்ற எழுத்தோவியம்

★

க. நாராயணன் எழுதியது

★

விலை ரூ. 2-8-0

★

பாரி நிலையம்,
பிராட்வே, சென்னை - 1,

மதறாஸ் பிராஸெஸ்
கலர்
ஆப்டோன்
லயன்
பிளாக்
தயாரிப்பவர்கள்
MADRAS PROCESS
NO 5 BLACKERS ROAD MADRAS
வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

கல்வெட்டுக்கள்...

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

புலத்து வாதாபியை வென்றவர் சிறுத்தொண்டர் என்று சேக்கிழார் தமது வரலாற்றுச் சிறப்புடைய பெரியபுராணத்தில் பாடியுள்ளார். வாதாபி இவ்வாறு வீழ்த்தப்பட்ட காலம் கி. பி. 642 என்று மேற் சொன்ன கல்வெட்டுக் குறிக்கிறது. இதனால் சிறுத்தொண்டர் காலம் இன்னதென உறுதிப்படுகிறது. அதனால் அவரது சமகாலத்தவரான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நின்ற சீர்நெடுமாறர் முதலியோர் காலமும் உறுதிப்படுகிறது. வாதாபிக் கல்வெட்டுச்செய்தி பெரிய புராணச் செய்திக்கு உறுதுணையாக நின்று, சமயாச்சாரியர் காலத்தை அறியவும் பெருந்துணை புரியும் பெற்றியை நாம் நன்கு உணரலாம்.

இப்பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களில் மன்னன் பெயர், அவனுடைய விருதுப்பெயர்கள். அவனுடைய போர்ச் சிறப்புகள், கல்வெட்டு எழுந்த நோக்கம் முதலியன சுருங்கிய அளவில் குறிக்கப்பட்டன; ஆயின், கூரம் பட்டயம் போன்ற பல்லவர் பட்டயங்களில் அவ்வேந்தர்கள் செய்த போர்களின் வருணனைகள் விரிவான முறையில் வடமொழிச் சுலோகங்களாகக் காணக் கிடக்கின்றன.

மெய்க்கீர்த்தி

பல்லவர்க்குப் பின்வந்த விஜயாலயன் மரபினரான பிற்காலச் சோழப் பேரரசருள் முதலாம் இராஜராஜன் கால முதலே தென் இந்தியக் கல்வெட்டுக்களிலும் பட்டயங்களிலும் விரிவான முறையில் அரசர்தம் வெற்றிகளை முறைப்படுத்திக் கூறும் 'மெய்க்கீர்த்தி' இடம் பெறலாயிற்று. மெய்க்கீர்த்தி எப்படி அமைந்திருக்கும் என்பதைப் பின்வரும் உதாரணம் கொண்டு அறியலாம்.

''ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும் தடிகைபாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோ ராஜகேசரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 26-வது...''

இதனால், இராஜராஜன் தனது 26-ஆம் ஆட்சி யாண்டுக்குள் சேரநாடு, வேங்கைநாடு எனப்படும் கீழைச் சாளுக்கிய நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் எனப்படும் மாலத்தீவுகள் என்பவற்றை வென்று சோழப் பேரரசனாக விளங்கினான் என்பது தெளிவாதல் காணலாம்.

இவ்வாறு சாஸனங்களில் இராஜராஜன் நுழைத்த மெய்க்கீர்த்தி முறை பின்வந்த சோழப் பேரரசர் அனைவராலும் கைக்கொள்ளப்பட்டது. மேலும் சோழப் பேரரசர் சமயவுணர்ச்சி மிக்கவரா யிருந்தமையால், அவர்கள் காலத்தில் கோவில்கள் பெருஞ்சிறப்புற்றன; அரசன் முதல் சாதாரணக் குடிமகன் ஈறாக அனைவருமே கோவில்களைத் தம் உயிரெனக் கருதி, அவற்றின் வளர்ச்சிக்குத் தம்மாலான அறங்களைச் செய்தனர்; அவ்வறங்களைக் கல்வெட்டுக்களில் பொறித்தனர். எனவே, சோழர் காலத்தில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் ஏற்பட்டன.

வைடமின் ப...

5-ம் பக்கம் தொடர்ச்சி

யைக் காட்டவே இப்படி எப்போதும் அதைக் கூறத் துணிந்துவிடுகிறாய்,"

''இந்த நடப்பு உண்மையை மறந்துவிட்டு, என் இனத்தைச் சாடுவது மட்டும் பெருந்தன்மை மிக்க குணம் போலும்!''

''பேச்சு; பேச்சு; பேச்சு! மணந்தவன் மனைவியோடு வாழ்வதால் மகிழ்ச்சியே பெறுதல் வேண்டுமென்று நான் நினைத்தது. எவ்வளவு முட்டாள்தனம். மண வாழ்க்கை சந்தோஷ நிலையின் நேர் எதிர்நிலை: நான் திருமணமே செய்துகொண்டிருக்கக் கூடாதா என்று இன்று விரும்புகிறேன். என் கலையுள்ளத்தை நாசமாக்கி விட்டாய். நான் கலைஞனாய் வாழ நீ விரும்பவில்லை; பூட்ஸுக்கு துடைக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறாய். அப்படியே யாகட்டும். கொண்டா நிம்மியின் பூட்ஸை, பாலிஷ் போட."

"நான் ஏற்கனவே பாலிஷ் போட்டுவிட்டேன்."

''பின் எந்தப் பைத்தியக்கார எண்ணத்தின்மீது...."

"நீங்கள் தானே முடிவேயிலாத வாதத்தில் இறங்கிவிட்டுப் பேசிக் கொண்டேயிருந்தீர்கள்; நான் அதனால் முன்பே சொல்லமுடியவில்லை. உள்ளபடியே நான் இங்கு வந்து சொல்ல விரும்பியது ஒரு சந்தோஷ சமாசாரம். இந்த மாதத்தில் வருடாந்திர அதிகரிப்பாக பத்து ரூபா சம்பளம்கூட வந்தது."

''ஆ; இந்த நடப்பு ஆண்டில் நம்முடைய வரவு 120 ரூபா அதிகம் என்று சொல். பேஷ்! ப்ரேமா. நீ மகா சாமர்த்தியசாலி. நான் இப்போது மகிழ்ச்சிப் பெருக்கால் கூத்தாட விரும்புகிறேன்."

''எனவே, மணவாழ்க்கையின் வெற்றித்திறவுகோலாக அமைந்துள்ளது வைடமின் ப என்பது பிரத்தியட்சமாக நிரூபிக்கப்படுகிறதல்லவா?"

''வைடமின் ப?"

''பணம். இந்தஅதிசய சத்தான உணவு வேண்டிய அளவு இருந்தால், உங்களால் முடிந்த அளவு வாதித்துக் கொண்டிருக்கலாமல்லவா?"

"ஆமாம். நீ கூறுவது உண்மையே. ஐயோ, உனது வம்பால், உன்னுடன் வீணில் பேசிக்கொண்டிருந்த காரணத்தால் உயர்ந்த இலக்கிய சிருஷ்டிக்கான விஷயத்தை சிந்திப்பதையே மறந்து விட்டேன்; சிதறிவிட்ட என் சிந்தனைக் கதிர்களை மீண்டும் ஒன்று சேர்க்கவேண்டும்."

—ஆதாரம் 'சங்கர்ஸ் வீக்லி'

—எக்காலம்?—

[முதலிரு வரிகள் யாரோ பாடியவை. அதுகொண்டு, மற்றது புனைந்தேன்.]

சீரங்கநாதரையும் தில்லை நடராசரையும்
பீரங்கி கொண்டு பிளப்பதுவும் எக்காலம்?

பெண்கேட்டுச் சேய்கேட்டுப் பித்தான சாமிகளை
மண்போட்டு மூடி மறைப்பதுவும் எக்காலம்?

வேதங்கள் துணையாக வீற்றிருக்கும் கற்சிலையைப்
பாதைக்குத் துண்டாக்கிப் பரப்புவதும் எக்காலம்?

இந்துமத நாற்றஇழி தகைமைச் சாத்திரத்தை
வெந்தணலில் போட்டு வேகவைப்ப தெக்காலம்?

ஒரு காலைத்தூக்கி உருண்டுவிழும் நடராசர்
மறுகாலுக் தூக்கி மாண்டுவிழல் எக்காலம்?

கன்னியர்தங் கற்பைக் களவாடும் கண்ணனவன்
சென்னியிலே நம் கைத்திறங்காட்டல் எக்காலம்?

காற்றுக்குச் சன்னல்வைத்து கச்சிதமாய் அலங்கரித்த
நாற்றமிகுங் கோயில்களை நலமாக்கல் எக்காலம்?

பள்ளிகளை நாட்டுப் பதவிகளைத் தமதாக்கிக்
கொள்ளையிடும் பார்ப்பார் குணம்மாறல் எக்காலம்?

வடக்குக் கொலைகாரர் வாரிப்போம் பொன்பொருளை
மடக்கித் தமதாக்கி வாழுவதும் எக்காலம்?

அக்காலம் எக்காலம்? அடிமேல் அடிவைத்தல்
எக்காலமோ அஃதே அக்காலம் என்றறிக!

—காரைமுத்துப்புலவர்.

"பாஸ்போர்ட்"

சென்னையிலிருந்து ஒருவன், தான் மலேயா போக வேண்டுமென்றும் அதற்கு பாஸ்போர்ட் வேண்டுமென்றும் 1941-ம் வருடம் ஏப்ரல் மாதம் விண்ணப்பித்திருந்தான். சுமார் ஆறு மாதங்கள் கழித்து, அவன் "பதினைந்து ரூபாய் கட்டி பாரம் வாங்கி பூர்த்திசெய்து கமிஷனர் ஆபீசில் கொடுக்க வேண்டு"மென்று அவனிடம் கூறப்பட்டது. அதன்படியே செய்தான். சில தினங்கள் கழித்து 'என்கொயரி'க்காக வந்த ஒரு போலீஸ்காரர் அவனை விசாரித்து எழுதிக்கொண்டுபோனார். மேலும், சிலநாள் கழித்து, அதில் சில குறிப்புகள் விட்டுப்போயிருப்பதாகக் கூறி, மீண்டும் ஒரு போலீஸ்காரர் வந்து விசாரித்து எழுதிக்கொண்டு போனார். பின்பு சில தினங்கள் சென்று, அவன் படித்துத் தேறிய பள்ளிக்கூடம் பற்றிய குறிப்பை, அதே போலீஸ்காரர் வந்து கேட்டுப்போனார். அப்புறம் சில நாட்கள் செல்ல, அவன் ஆணா பெண்ணா என்பதை ஒரு போலீஸ்காரர் வந்து கேட்டுப்போனார். பிறகு ஒரு நாள், அவனைப் பற்றிய விபரம் பாஸ்போர்ட் ஆபீசிற்குப் போய்ச் சேர்ந்தது. அங்கிருந்து பிறகு ஷை நபரின் பெயருக்கு பாஸ்போர்ட் பதிவு செய்து அறிவிக்கப்பட்டது.

காலையிலே ஒரு நண்பர் ஷை நபரின் வீட்டுக்குப் போய், அங்கிருந்த ஒருவரிடம் நண்பனுக்கு பாஸ்போர்ட் வந்த செய்தியைச் சொன்னார். அந்த நண்பர் கவலையோடு, "அவன் பாஸ்போர்ட் இல்லாமலே பிரயாணம் செய்துவிட்டானப்பா!" என்று மேலே கையைக் காட்டினார். அன்றைக்குத் தேதி 1955-ம் வருடம் ஏப்ரல் மாதம் ஏழாம் தேதி."

"கற்பனை"

வெண்பாப் போட்டி

9 இல்லையோ வெங்கட் கிடம்!

• வெண்பாப் போட்டி 9-ன், பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ பிறப்பால்யாம் ஆரியரே யாயினும்பூ ணூல்புல்
துறத்தலைக் காணீர்! பகைவர்க்(கு)--இப்பினும்
அல்லவைசெய் யாத்தமிழ ஆண்மைநிறை தென்னகத்தில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—"மங்கலவாணன்", திருமங்கலம்.

★

என்னவென்றே யானுரைப்பேன் நல்லவன் போல்நடித்து
வன்மனத்தால் ஈர்த்தே கலந்திட்டான்--புன்மனமே
வல்வினையால் தாய்மையை எய்திடவே யிப்பாரில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—பு ர. வெ. சார், திண்டிவனம்.

★

சிங்களத்தி லேதமிழர் சீரழிவைக் கேளீரோ?
கொங்கணத்தி லேஎமது கூக்குரலை--எம்கேளீர்!
சொல்லையா வாழத்தான் சொந்தத் திருவிடத்தில்
இல்லையோ வெங்கட் கிடம்?

—முத்தமிழ்ப்பித்தன்; நாரைக்கிணறு.

★

கொண்டவனைத் தீண்டாதே தோஷமெனக் கண்டித்தாய்
மண்டூக வைதீகமே, மற்றதற்கு--மண்டியிடேன்!
இல்லாளு மிசைவாள்; பகுத்தறிவுப் பாசறையில்
இல்லையோ வெங்கட் கிடம!

—இரத்தினமனோகரன், கோலார் தங்கவயல்.

★

மனையாள் மறித்திட்டால் மாற்றுப்பெண் கொள்ள
கணவனுக்கு நீதியுண்டாம் கற்றோய்!--கணவன்தான்
இல்லாதகைம் பெண்வாழ் விதழ்மொட்டு மேமலர
இல்லையோ வெங்கட் கிடம்?

—எம் துரைராஜ், ஈரோடு.

★

மின்னலுடன் பெய்தமழை வெள்ளமெங்கள் மண்குடிசை
தன்னையே தாக்கித் தகர்த்ததையோ--பொன்கூரைத்
தில்லையில் உள்ள சிவனாரே! உம்நிழலில்
இல்லையோ வெங்கட் கிடம்?

—மு. முனியப்பன், மதுரை.

★

காலைமுதல் மாலைவரை கால்வலிக்க ஊர்சுற்றி
வேலையில்லை என்றுகேட்டு வேகின்றேன்--வேலையிலே
வெல்லரிய வெம்பசிநோய் இல்லா இடம்போக
இல்லையோ வெங்கட் கிடம்

—கடாரங்கொண்டான், தேவகோட்டை.

★

பூவிழந்தோம் பொட்டிழந்தோம் பூணுவான் (அ)னைத்திழந்தோம்
பாவையராய்த் தோன்றிப் பயனிலையே--பாவலரே
தொல்லுலகில் வாழ்விலையே னும்மரணச் சோலையிலே
இல்லையோ வெங்கட் கிடம்.

—சங்கமணி, பொள்ளாச்சி.

★

கலைவளர்த்தோம் கன்னித் தமிழ்வளர்த்தோம்; உங்கள்
நிலைவளர்த்தோம் செல்வளர்த்தோம்; பண்டு--நிலைமறந்து
தொல்லை தருகின்ற தொல்தமிழ் சிங்களத்தில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—பே. சா. பொருளரசு, பேரையூர்.

தண்ணிலவு விண்ணிரப்பத் தாமரைகள் தாள்குவித்தும்
எண்ணிறந்த தும்பிகளே ஏற்றுவதென்--கண்மலராய்!
அல்லியுடன் வெள்ளாம்பல் அந்தியிலே பூப்பதனுல்
இல்லையோ வெங்கட் கிடம்?

—அழ. சிதம்பரம், இராமச்சந்திரபுரம்.

★

கைம்பெண்ணென் றிட்டர், களைந்தீர் அணியெல்லாம்
மைகூந்தல் நீக்கி மனையிருத்தி!--ஐயகோ!
நல்ல இளைஞருடன் நாம்வாழ நானிலத்தில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—க. குணசேகரன், சென்னை 3.

★

வந்தோர் வளனுடனும் வாழ்ந்தோர் வறனுடனும்
நந்நாட்டில் வாழுகின்றார்; மின்னிடையே--இந்நாட்டில்
தொல்லையெலா நீங்கித் துயர்துடைத்துத் தாங்குதற்கும்
இல்லையோ வெங்கட் கிடம்.

—ப. சரசுவதி, மகிழம்பூச்சாவடி.

★

பதுங்கி ஒடுங்கியாம் பாழானோர் சேரி;
ஓதுங்கி உயர்வோர்க்கோர் சேரி;--இதங்காட்டி
எல்லோரும் ஒன்றாக எண்ணும் நிலப்பரப்பில்
இல்லையோ வெங்கட் கிடம்?

—க. ராமசாமி, பொறையார்.

★

காந்தக் கவிப்பெருக்கைக் கள்ளுவெறி கொள்ளுவிதம்
தீந்தமிழ்த்தேன் நற்சுவையில் தீட்டுவதால்--சிந்துகின்ற
தொல்லையோ கூலி? தொழுபுகழின் பட்டியலில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—இளவல்கோன், ஒலகடம்.

★

உண்ணவுண வற்றும் உழைக்க மறுத்தோமில்
எண்ணத் திலேனுமெமக் கின்பமில்--தண்ணிலவே!
நல்லபணி செய்தும் நலிவற்று வாழ்வதற்கு
இல்லையோ வெங்கட் கிடம்.

—முருகு, வரகூர்.

★

ஏடாளும் நண்பர்களும் ஏட்டினிலே தீட்டுதுங்காண்
நாடாளும் மந்திரிகாள் நாங்களின்னும்--வீடாளும்
தொல்லைப் படுகின்றோம் தொண்டுசெய்தும் சென்னையிலே
இல்லையோ வெங்கட் கிடம்.

—வித்துவான் சி. இரத்தினவேலனார், சென்னை 19.

★

ஆரியர்க ளாட்சியிலே யன்றுநிறுத்த தீண்டாமை
சீரியதோ மாநிலத்தீர் செப்புவீர்--சேரியதா
யெல்லோரு மோர்குலமென் றிவ்வுலகில் யாம்வாழ
இல்லையோ வெங்கட் கிடம்.

—பி. எல். ஆவிடையப்பன், பட்டுக்கோட்டை.

★

அல்லும் பகலு மடையவுனை ஏங்கியாங்கள்
கல்லுடைத்தும் பட்டினியால் காய்கின்றோம்--செல்வமே!
நல்லவை செய்வாரை நாடாயோ? உன்மனதில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—இரா. கலியாணசுந்தரம், வலங்கைமான்.

★

விடிந்தது மோடேந்தி வீடுவீடாய்ச் சென்றுப்
பிடிசோறு கேட்கின்றோம் பிச்சை--அடிபட்ட
நல்லபாம்பாய்ச் சீறுகின்றார், நன்மக்காள்! இவ்வுலகில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—மேகநாதன், துறையூர்.

★

உடலை வருத்தி உழைக்குமெங் கட்கு
நடலை தவிரவே றேது?--அடலேறே!
புல்லரும் பொய்யரும் பூரிக்கும் இன்பத்தில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—இளமுருகு, அருப்புக்கோட்டை.

★

பீடுடையான் மாடுடையான் பேருலகி லேதுடு
காடுடையான் போன்ற கடவுளெலாம்--நீடுலகிற்
கல்லே யவைக்க டவுளல் லவென்றதாலே
இல்லையோ வெங்கட் கிடம்.

—[illegible]

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ.,எல்.டி.

பதில் தருகிறார்

கருணுபான், யாழ்ப்பாணம்.

(அ) பத்துப் பார்ப்பனரோடு செங்குட்டுவன் "யாகம்" செய்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறதே, "யாகம்" செய்தல் தழ்ப்பண்பாடா?

(ஆ) "கறுப்பையா-கருப்பையா" "ஆறுமுகம்-ஆருமுகம்," "அறுப்புக்கோட்டை - அருப்புக்கோட்டை" இத்தொடர்களில் உள்ள பெயர்களில் இலக்கண முறைப்படி சரியானவற்றைக் காரணங்காட்டி எழுதுக?

(இ) "சிவபெருமானுணை", பிள்ளையாராணை", "ஐயனாராணை," "வைரவராணை," "உன்னுணை," "கண்ணுணை" இந்த ஆணைகளால் தமிழ்மக்களடைந்ததை விளக்கமாகக் கூறமுடியுமா?

(அ) யாகம் என்ற சமஸ்கிருத சொல்'வேள்வி'என்றதமிழ்ச்சொல்லின் இடமாக இன்று வழங்கப்படுகிறது. தமிழருக்கு யாகம்கிடையாது. ஆனுல், வழிபாடு உண்டு. அந்த வழிபாடே'வேள்வி' என்று அழைக்கப்பட்டது. வடநாட்டவர் தொடர்பு ஏற்பட்டபின் வைதீக வேள்வி முறையும் புத்த சமண வேள்வி முறைகளும் வந்து வழங்கின. வைதீக வேள்வி கொலைச் சார்பானது. மற்றைய இரண்டும் தமிழர் வழிபாட்டு முறைக்குமுரண்பட்டதல்ல. ஆரியர் தமிழரசரை மெல்ல மெல்ல கொலையிலா வேள்வியில் தூண்டினுர். புத்த சமணர் ஒத்துழைப்புடன் இது ஓரளவு அக்காலத்தில் வெற்றி பெற்றது. கண்ணகி குடும்பத்தினர் ஆசீவக சமயம் அல்லது சமண சமயத்தை சார்ந்தவர்களாதலால் திருமணத்தில் சமணருக்குரிய முக்தி வளர்த்தினர். அதை வளர்த்த பார்ப்பார் சமண புரோகிதர். வைதீக ஆரிய புரோகிதர் சம்ஸ்கிருதத்தில் பிராமணர் என்று அழைக்கப்பட்டதுபோல, சமண புரோகிதர் 'சிராமணர்' என்று அழைக்கப்பட்டனர். சமணர் என்ற சொல்லின்மூலம் இதுவே.

செங்குட்டுவன் செய்த வேள்வி சமண வேள்வியாகவும் இருந்திருக்கலாம். வைதீக ஆரிய வேள்வியாகவும் இருந்திருக்கலாம். ஆனுல், அது கொலை வேள்வி அல்ல என்பது உறுதி. அசோகன் காலத்திலிருந்து நல்லாரிய நாடாகிய கங்கை நாட்டிலேயே கொலை வேள்விகள் நிறுத்தப்பட்டன. இன்றுவரை தென்னுட்டு வைதீக ஆரியர் தமிழரைப் பின்பற்றி கொலையையும் கள்ளையும் விலக்கியே வாழ்கின்றனர்.

(ஆ) "கருப்பையா", "கறுப்பையா" ஆகியவற்றில் நிறத்தை அடிப்படையாகக் கொண்ட பெயராக முன்னதே சரியான வடிவம். கருமை என்பதில்தான் இடையின ரகரம் இடம்பெறுகிறது. 'கறுப்பு' என்ற மறு வடிவம் வல்லின ற கரத்தை யுடையதே. ஆயினும் கரும்பின் தெய்வம் அதாவது 'வேள் மதன்' என்ற பொருளில் கருப்பையா என்பதும் சரியான வடிவம் தான். முன்னது கறுப்பன் என்ற தினைத்தெய்வம், அதன் மறுவடிவான கண்ணன் அல்லது திருமாலின் பெயர். பின்னது காமன் பெயர்.

ஆறுமுகம் என்பதே சரி. இடையின ரகரம் தவருனது. அது போலவே அறுப்புக்கோட்டை சரியான வடிவம். இடையின ரகரம் தவருனது.

(இ) ஆணையிடுதல் என்பதுஉறுதி கூறல என்பதே. அறு கூறுபவர். தன்மானம் மனத்திப்பம் செயல் உறுதி ஆகியவற்றைப் பொறுத்தது. தமிழர் சமயத்துறையிலும் சரி, வாழ்க்கைத் துறையிலும் சரி இத்திட்பங்களை கைவிட்டு பல நாட்களாகின்றன. வள்ளுவர் குறள்பயிற்சி தக்கமுறையில் வலியுறுத்தப்பட்டால் வருங்காலத்திலேனும் நம் வாழ்வில் அடிமைத்தனம், கோழைத்தனம், திட்பமின்மை ஆகியவை நீங்கலாம்.

கா. இ. அப்துல்லத்தீப்
எருமைப்பட்டி

வேம்பு முதரடிந்த
வேந்துவாள்வலத்துப்
போந்தைக் கண்ணிப்
பொறைய கேட்டருள்
கொற்கை யிலிருந்த
வெற்றிவேற் செழியன்
பொற்றெழிற் கொல்லை
ரீரைஞ் ஞூற்றுவ
ரொரு முலை குறைத்த
திருமா பத்தினிக்
கொரு பகலெல்லை
யுயிர்ப்பலி யூட்டி
யுரைசெல வெறுத்த
மதுரை மூதூ

இதன் பொருளை விளக்குக.

இவ்வடிகள் சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் 27-வது நீர்ப்படைக் காதை 125 முதல் 139 வரை வரிகளாகும். செங்குட்டுவன் வடநாடு சென்று கனக விசயரை வென்று கண்ணகிக்கு கல் எடுத்து அதனை கங்கையாற்றில் மூழ்க்காட்டி அங்கேயே தங்கியிருக்கிறன். அச்சமயம் மாடலன் அவனைக்கண்டு தமிழகத்தில் கண்ணகி மாதவி குடும்ப நிகழ்ச்சிகளை தெரிவித்த பின் பாண்டி நாட்டு தகவல்களையும் அறிவிக்கிறுன்.

பழையன மாறனின் காவல் மரமாகிய வேம்பை அழித்து வெற்றி கொண்ட வாளையுடைய செங்குட்டுவனே! பனந்தாரைச் சூடிய சேரனே! கேட்பாயாக! மதுரை எரியுண்டபின் நெடுஞ்செழியன் மகன்வெற்றிவேற்செழியின் கொற்கையிலிருந்து அரசாளுகிறுன். அவன் கண்ணகியின் கோபம் தீர ஆயிரம் பொற்கொல்லரை ஒரு பகலில் பலிகொடுத்திருக்கிறுன். கண்ணகியால் புகழுக்கு கறைதந்த மதுரையை விட்டு வெளியே ஆட்சி செலுத்துகிறுன். புதுப்புகழ் துவக்குகிறுன்.

சே. வேலு, நாமக்கல்.

1. திருவள்ளுவர் ஆண்டைத் தவிர தமிழர்களுக்கு தமிழ் ஆண்டைக் கணக்கிட வழிஉண்டா? உண்டு என்றல் அதை தெரிவிக்கவும்.

2. வெண்ணிக்குயத்தியார் இயற்றிய பாடல் எத்தனை? ஏதாவது ஒரு பாடலை சான்று தருக - அவர் எநத ஆண்டு எந்த அரசவையில் புலவராக இருந்தார்?

3. பேய் பிடித்தவர்களின் உடல் நிலை பாதிக்கப்படுகிறது. பேயை ஓட்டியபின் உடல்நிலை நலம் பெருகிறது இதற்குக் காரணம் என்ன?

4, ஆரியரில்லாத மற்றவர்கள் பூணூல் அணியக் காரணம் என்ன?

1. கொல்லம் ஆண்டு, மெய் கண்டான் ஆண்டு முதலிய பல காலக் கணக்குகள் தமிழரிடையே வழங்கியதுண்டு. ஆனுல், சமயம், இடம், கொள்கை வேறுபாடுகள் இவ்வகையிலும் தமிழர் தேசீய ஒற்றுமையை கெடுத்து வருகிறது. மொழி ஒன்றுதான் தமிழனை இணைத்தது. இணைத்து வருகிறது. திருவள்ளுவா ஆண்டிலேனும் ஒற்றுமை கண்டால் தமிழனுக்கு இனியாவது வாழ்வு உண்டு.

2. வெண்ணிக் குயத்தியார் சங்க காலப்பெண் புலவர். சங்க இலக்கியங்களில் அவர் பாடல் ஒன்றே அகப்படுகிறது. அப்பாடல் புறநானூறு 66-வது பாட்டு. அது சோழன் கரிகால் பெருவளத்தானையும் அவனுல் வெண்ணிப் பரந்தலை என்ற இடத்தில் இறந்த சேர அரசனையும் குறிப்பிட்டு பின்னவன் புகழே சிறந்தது என்று பாராட்டுகிறது.

புலவர் காலத்தையும் பாட்டே காட்டுகிறது. அவர் அரசவைப் புலவராய் இருந்தாரென்று தோற்றவில்லை.

3. பேய்பிடித்தல் என்பது நரம்பு நோய்; உணர்ச்சி வசப்பட்டது. நம்பிக்கை அடிப்படையாக பேய் ஓட்டுபவர் சில சமயம் வெற்றிபெறுகின்றனர்.

4. பூணூல் இன்று ஆரியர் சின்னமாக கருதப்படுகிறது. ஆனுல், முதல் முதல் நூல் நூற்றவன் ஆரியருக்கு முற்பட்ட தமிழன் அதாவது திராவிடனே. நூல் கற்ற தன் அடையாளமாகவே தொடக்கத்தில் நூல் கையிலோ கழுத்திலோ அணியப்பட்டிருக்கலாம். தச்சர் முதலிய கலைஞர் இதை அணிவது பொருத்தமானது, அவர்களில் சிலர் அத்துறை நூல்களை துறைபோகக் கற்றிருக்கலாம். ஆரியர்கள் இடைக்காலங்களில் தமிழ்ப் புலவர் உரிமைகளையும் சின்னங்களையும் தமதாக்கிக் கொள்ளவே தாமணிந்த தோல்வாரை பூணூல் ஆக்கியிருக்கவேண்டும். இன்றும் அதன் சின்னமாக அவர்கள் பூணூலில் பழைய தோலை கட்டிக்கொள்கின்றனர்.

அடுத்த இதழில்

சிரிப்புத்தான் வருகுதையா

இடம்பெறும்

கண்ணதாசன் இலங்கைப் பயணம்

பாஸ்போர்ட் தாமதத்தால் ஒத்திவைப்பு

ஆசிரியர் கண்ணதாசன் கடந்த 11-12 தேதிகளில் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ் வாலிபர் சங்க விழாவில் கலந்து கொள்ளப் புறப்படுவதாயிருந்தது, பாஸ்போர்ட் கிடைக்காததால் இயலாமற் போய்விட்டது. 23-ந் தேதிக்கு மேல்தான் பாஸ்போர்ட் கிடைக்கும் என்று ரீஜனல் பாஸ்போர்ட் ஆபீஸிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஆகவே, கண்ணதாசன் பயணம் ஜூலைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி இலங்கை இயக்கத் தோழர்களுக்கும், தமிழ் வாலிபர் சங்கத்துக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேதி விபரம் பின்பு தெரிவிக்கப்படும்.

அன்புடையீர்!

நிகழும் 19-6-55 ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணி அளவில் எனது தம்பி,

செல்வன்

தி. வீ. கணேசனுக்கும்

செல்வி

நாகரெத்தினத்திற்கும்

(திரு. ஏ. நடேசம் பிள்ளை குமாரி)

அறிஞர் அண்ணு

அவர்கள் தலைமையில்

திருச்சி சிந்தாமணி சின்னையாப் பிள்ளை சத்திரத்தில் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்புள்ள,

தி. வீ. முத்துகிருஷ்ணன்,

திராவிடப் பண்ணை, திருச்சி.

ஓவர்ஸீயர் கோர்ஸ்

S. S. L. C. தேறிய அல்லது தேருதவர்கள் படிக்கலாம். சர்க்கார் பரீட்சையில் தேறியவர்கள் ஓவர்ஸீயர் **or** டிராப்ட்ஸ்மென் வேலை பெறலாம். வேலை வாங்கித்தரஉத்திரவாதமளிக்கிறேம். ஹாஸ்டல் உண்டு. விபரங்கட்கு ஒன்பது ஒரு அணு ஸ்டாம்புகள "பிரின்ஸிபால் (**N.K.R.** மூர்த்தி, **B.Sc. Engg**) காலேஜ் ஆப் இஞ்ஜினியரிங், தினமணி டாக்கீஸ் சமீபம், மதுரை," விலாசத்திற்கு அனுப்பவும்.

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14.